பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 09 வியாழக்கிழமை (25-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:242



களுத்துறைச் சிறைச்சாலைக்கு அமைச்சர் பெ. சந்திரசேகரன் நேற்று விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

கைதிகள் மத்தியில் அமைச்சர் உரையாற்றுவதை முதற்படத்திலும் -

கைதி ஒருவருக்கு நீராகாரம் வழங்குவதை இரண்டாவது படத்திலும் -

உண்ணாவிரதப் போரில் ஈடுபட்ட கைதிகளில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## ஜனாதிபதியின் கைப்பை விவகாரம்

# நாடாளுமன்றத்தில் நேற்று

# அமளி துமளி! கைகலப்பு!!

## அரசாங்க - எதிர்க்கட்சி எம்.பிக்கள் முஷ்டியை முறுக்கிக்கொண்டு மோதல்

கொழும்பு,ஜூலை25

**நாடாளுமன்றம் நேற்றுக்காலை கூடியபோது அங்கு பெரும் அமளிதுமளி ஏற்பட்டது; கைகலப்பு இடம்பெற்றது. அரச - எதிரணி எம்.பிக்கள் முஷ்டியை முறுக்கிக்கொண்டு சண்டித்தனம் காட்டினர். நாடாளுமன்ற மையப் பகுதியில் கோதாவில் இறங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களால் சபை அமர்வு அல்லோலகல்லோலமானது.**

நாட்டின் அதியுயர் சட்டமாக்கும் சபையான நாடாளுமன்றம், நேற்று அதன் உறுப்பினர்களின் செயற்பாட்டினால் அவமானப்படுத்தப்பட்டது. கூச்சல், குழப்பநிலையால் சபை நிகழ்வுகளை அவதானிக்கமுடியாத நிலை உருவானது.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் கூடிய சிறிது நேரத்தின் பின்னரே இச்சம்பவங்கள் நிகழ்ந்தன.

சபையின் வழமையான அலுவல்களுக்குப் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

கடைசியாக நடைபெற்ற அமைச

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 'ட்ரயல் அற் பார்' விசாரணை

கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் மிருசுவிலில் விறகு வெட்டச்சென்ற எட்டுப் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு 'ட்ரயல் அற் பார்' முறையில் விசாரணை செய்யப்படவிருக்கின்றது

இந்த விசாரணைக்காக மூன்று நீதியரசர்களை நியமிக்கும்படி சட்டமா அதிபர் பிரதம நீதியரசரைக் கேட்டுள்ளார்.

இந்தக் கொலைகள் தொடர்பாக ஒன்பது படையினர் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கே ஜூரர்கள் இன்றி 'ட்ரயல் அற் பார்' முறையில் விசாரணை செய்யப்படவிருக்கின்றது. (ஐ-3)



அதிபர் புஷ்ஷும், பிரதமர் ரணில் விக்[illegible]கவும் நேற்று வெ[illegible]மாளிகையில் சந்தி[illegible]போது....

## களுத்துறைக் கைதிகளின் போராட்டம் இடைநிறுத்தம்

கொழும்பு,ஜூலை25

களுத்துறைச் சிறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ்க் கைதிகள் தமது போராட்டத்தை ஐந்து நாள்களுக்கு இடைநிறுத்தியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமைமுதல் களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள கைதிகளில் 67 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்தக் கைதிகளை நேற்றுப் பார்வையிட்ட மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் விடுத்த கோரிக்கையை ஏற்று தமது போராட்டத்தை ஐந்து நாள்களுக்கு இடைநிறுத்தக் கைதிகள் இணங்கினர்.

பல தடவைகள் தமக்கு வாக்குறுதிகள் தரப்பட்டன என்றும் -

அவை நிறைவேற்றப்படாததால் தொடர்ந்தும் தாங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் -

உறுதியான பதில் தரும்வரை தமது போராட்டத்தைத் தொடரப் போவதாகவும்

கைதிகள் சந்திரசேகரனிடம் தெரி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழக மாணவன் வானில் கடத்தப்பட்டு சித்திரவதை!

### மூன்று மணிநேரத்தின் பின் முகமாலையில் இறக்கிவிடப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஜூலை25

யாழ். பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர் ஒருவர் யாழ்நகரில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு கடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

கலைப்பீட (புவியியல் சிறப்பு) இறுதியாண்டு மாணவனான விநாயகமூர்த்தி தயாபரன் என்பவரே கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டவராவார்.

இவர் வன்னியைச் சேர்ந்தவர். கொக்குவிலில் தங்கியிருந்து கல்வி கற்று வந்தார்.

பரபரப்பான இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

கொக்குவில் பகுதியில் இவர் தங்கியிருந்த வீட்டுக்கு திங்கட்கிழமை காலையில் சென்ற நபர் ஒருவர் மாணவனின் தந்தையார் கடும் சுகவீனமுற்று யாழ். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். அதனைக் கேள்வியுற்ற அந்த மாணவன் உடனடியாகத் தனது சைக்கிளில் மருத்துவமனைக்கு விரைந்திருக்கிறார். ஆனால், தனது தந்தை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் பேட்டி பற்றி விளக்கம்

அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கே 'நியூ யோர்க் ரைம்ஸ்' மற்றும் 'வாஷிங்ரன் ரைம்ஸ்' ஆகிய பிரபல பத்திரிகைகளுக்கும் பேட்டி அளித்தார்.

"தமிழருக்கு சமூக, பொருளாதார, கலாசார விடயங்களிலேதான் அதிகாரப்பகிர்வு - அமெரிக்காவில் பிரதமர் அறிவிப்பு; புலிகளையும் கடுமையாகச் சாடுகிறார்" - என்ற தலைப்பில் நேற்றைய 'உதயனின்' முதலாம் பக்கத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 'வாஷிங்ரன் ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி விவரமே பிரசுரமாகியிருந்தது.

[illegible]

[illegible] பேட்டிக் கட்டுரையை வரைந்த செய்தியாளர் தெரிவித்திருந்த கருத்துக்களும் பிரசுரமாகியிருந்தன.

அவர் தெரிவித்த சில கருத்துக்கள் பிரதமர் கூறியவையாக வெளியிடப்பட்டுவிட்டன.

குறிப்பாக,

☆ 20 வருடப் போரில் 80 ஆயிரம் மக்களைப் புலிகள் கொன்றார்கள்.

☆ இந்து சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு தங்களை எதிர்த்த தமிழர், சிங்களவர்களைப் புலிகள் கொன்றார்கள்.

☆ புலிகள் நடத்திய படுகொலை [illegible]

## அமெரிக்க அதிகாரிகள் பலருடன் பாதுகாப்புக் குறித்து ரணில் பேச்சு

வாஷிங்ரன்,ஜூலை25

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது குழுவினரும் வாஷிங்ரனில் அமெரிக்க அதிகாரிகள் பலரைச் சந்தித்துப் பாதுகாப்பு உட்பட பல விடயங்கள் குறித்து பேச்சு நடத்தினர்.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் சர்வதேச உறவுகளுக்கான நிறைவேற்றுக்குழுத் தலைவரான ஹென்றி [illegible] பான நாடாளுமன்ற நிறைவேற்றுக்குழுவின் முன்னாள் தலைவரான ஹில்மன் ஆகியோரைப் பிரதமர் ரணில் சந்தித்திருக்கிறார்.

அமெரிக்க நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையின் இன்றைய நிலைமையும் இலங்கைக்கு உதவி வழங்கும் வழிமுறைகளையும் ஆராய அமெ[illegible] பான நாடாளுமன்ற நிறைவேற்றுக்குழுவின் முன்னாள் தலைவரான ஹில்மன் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்றார் என்று இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் பாதுகாப்பு ஆலோசகரும் தற்போதைய ஜனாதிபதியின் சர்வதேச உளவுத்துறை தொடர்பான பிரிவின் தலைவருமான [illegible]

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்








இங்கிலாந்தின் நியூடவுண் கிரிக்கெட் கழகத்துடனான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் போட்டியொன்றில் யாழ்.பல்கலைக்கழக அணி ஐந்து ஓட்டங்களால் வெற்றிபெற்றிருப்பது தெரிந்ததே.

இங்கிலாந்தின் நியூடவுண் கிரிக்கெட் கழக வீரர்களுடன் யாழ்.பல்லைக்கழக அணியினர் முதற்படத்தில் காணப்படுகின்றனர்.

வெற்றிக்களிப்பில் குதூகலிக்கும் யாழ்.பல்கலைக்கழக வீரர்களை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை25

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வடமராட்சி கழகங்களுக்கிடையில் திக்கமுனை மைதானத்தில் நடத்திவரும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் கால்இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

❊ மாலை 4 மணி - பொதிகை விநாயகர் வி.க. அணி எதிர் வதிரி பொமேர்ஸ வி.க.அணி.

❊ மாலை 5 மணி - மணற்காடு சென்.அன்ரனீஸ் வி.க.'ஏ' அணி எதிர் வல்வை ஆதிசக்தி வி.க. அணி.(எ-3)

☆ ☆ ☆

குருநகர்,ஜூலை25

பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் நல்லூர் ஞானக்குழந்தை இல்லத்தின் 9 ஆவது வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு பொறுப்பாசிரியை செல்வி அனுசுயா அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். கனகரத்தினம் ம.ம.வித்தியாலய அதிபர் வி. மாணிக்கம் பிரதமவிருந்தினராக கலநது கொள்வார். (எ-51)

☆ ☆ ☆

வலி.வடக்கு,ஜூலை25

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் 13 வயதிற்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

❊ சென்ஜோன்ஸ் கல்லூரி எதிர் யாழ்மத்தியகல்லூரி - (சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானம்)

❊ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி - (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானம்)

❊ சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் யாழ்.இந்துக் கல்லூரி (சென்.பற்றிகஸ் கல்லூரி மைதானம்)

❊ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி (மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம்) (எ-86)

யாழ்ப்பாணம்,ஜூலை25

வடக்கு - கிழக்கு மாகாண மெய்வன்மைப் போட்டிகள் நாளைமறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்கென யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் அனைவரையும், இன்று காலை 8 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கிற்கு வருகை தருமாறு மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எப்.ஜே. ரூபசிங்கம் கேட்டுள்ளார். (எ-10)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூலை25

ஹற்றன் நஷனல் வங்கியின் ஏற்பாட்டில் யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இடம்பெற்று வரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4.30 மணிக்கு நடக்கும் ஆட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரியும் யாழ்ப் பாணக்கல்லூரியும் பங்குபற்றுகின்றன. (ஐ-3)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூலை25

பாலர் கல்விக்கழகத்தின் கீழ் இயங்கும் நாவலர் பாலர்சோலையின் 10 ஆவது விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். செட்டித்தெரு மி.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி வித்தியாலய அதிபர் ந. ஸ்ரீதரன் இந்த விளையாட்டு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (எ)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூலை25

யாழ்மாவட்ட சதுரங்கக் கழகத்தின் அனுசரணையுடன் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தினால் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நாளைமறுதினம் சனிக்கிழமை சதுரங்க விளையாட்டு செயலமர்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.

பாடசாலைகளில் சுகாதாரம், உடற்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்தச் செயலமர்வில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

## வைகோ கைதைக் கண்டித்து

# குடாநாட்டில் வெள்ளியன்று கறுப்புப்பட்டி போராட்டம்!

## யாழ்.வணிகர்கழகத்தின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,ஜூலை25

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து யாழ்வணிகர்கழகத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டத்தில் கறுப்புப்பட்டி போராட்டமும் கண்டனக்கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளன.

நாளை காலை சகல வர்த்தக நிலையங்களிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்படும் அதேபோல் சகல வர்த்தகர்களும் கறுப்புப்பட்டி அணிந்தவாறு வழமைபோல் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

தொடர்ந்து மாலை 4 மணியளவில் யாழ்.வணிகர்கழகப் பணிமனையில் ஒன்றுகூடும் வர்த்தகர்கள், வைகோ கைது குறித்து கண்டனத்தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவர்.

ஈழத்தமிழர்களின் விடிவுக்காகக் குரல்கொடுத்து, சிறையில் வாடும் வைகோவை நேசிக்கும் சகல வர்த்தகர்களும் மேற்படி கறுப்புப்பட்டி போராட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது. (எ)

# நெடுந்தீவில் இன்று கண்டனப் பேரணி

## ஜெயாவின் கொடும்பாவியும் எரிக்கப்படும்

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நெடுந்தீவில் இன்று கண்டனப்பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு உ.அ.அ. பணிமனை முன்றிலில் உள்ள தியாகிகள் நினைவுத்தூபியில் இருந்து ஆரம்பமாகும் இப்பேரணி, பிரதான வீதியூடாக நெடுந்தீவு மாவலித்துறை துறைமுகத்தை வந்தடைந்ததும் அங்கு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் கொடும்பாவி எரிக்கப்படும்.

இதேவேளை -

மேற்படி பேரணியில் கலந்துகொள்வோர் வைகோவை உடனடியாக விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்கக் கோரும் மகஜர்களை நெடுந்தீவு உ.அ. அதிபர், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் ஆகியோரிடம் கையளிப்பர் எனவும் கூறப்பட்டது. நெடுந்தீவில் உள்ள பொது அமைப்புகள் இதனை ஏற்பாடுசெய்துள்ளன.(எ)

## வைகோவை கைதுசெய்ததால்

# ஜனநாயகம் குழிதோண்டிப் புதைப்பு! பாண்டிருப்பு கூட்டத்தில் சந்திரநேரு

"ஜனநாயகத்திற்கு பேர்போன இந்திய மண்ணில் தன்மானம்மிக்க வீரத தலைவன் வைகோவை 'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்ததன் மூலம் ஜெயலலிதா ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டார்"

- இவ்வாறு பாண்டிருப்பில் நடைபெற்ற கண்டனப் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அ.சந்திரநேரு எம்பி. குறிப்பிட்டார்.

தமிழக அரசு, கைதுசெய்து தடுத்து வைத்துள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் வைகோவை உடன் விடுதலை செய்யக் கோரியும், அவரது கைதைக் கண்டித்தும் சமீபத்தில் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியம் நடத்திய இந்த கண்டனப் பொதுக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள், கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், சமூக நல நிறுவனங்களின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

திகாமடுவல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தமிழீழ தேசியத் தலைவரின் எழுச்சியை சகிக்கமுடியாத ஜெயலலிதா எமது தலைவரை நாடு கடத்துமாறு கேட்பது வேடிக்கையானது. இவரது அராஜகங்களைக் கண்டித்தும், ஈழத் தமிழர்களின் நல்வாழ்வுக்காகவும் வைகோ குரல் கொடுத்ததற்கு இன்று ஜெயலலிதா வைகோவை சிறையில் அடைப்பாரானால், அன்று புலிகளுக்கு ஆதரவு வழங்கிய மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி. ஆரை என்ன செய்திருப்பார்?

இலங்கை அரசும் - தமிழீழ விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவுள்ள இவ்வேளையில் ஜெயலலிதா ஆடும் நாடகத்தை தன்மானமுள்ள தமிழக மக்கள் மட்டுமன்றி, உலகில் வாழும் சகல தமிழ் மக்களும் தடுத்துநிறுத்த ஓரணியில் திரண்டு வைகோவின் கரத்தை பலப்படுத்த வேண்டும்.

இன்று உலகில் உள்ள சகல போராட்டக் குழுக்களும் தலைவர் பிரபாகரனின் போராட்ட உத்திகளையும், தியாகங்களையும், மனோதிடத்தையும் கண்டு வியந்து நிற்கின்ற இந்நிலையில், மலையைப் பார்த்து நாய் குரைப்பதுபோல ஜெயலலிதா செயற்படுவது ஏன்?

- இவ்வாறு கேட்டார் சந்திரநேரு.

இக்கூட்ட ஆரம்பத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை கண்டித்து அவருக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன. (ஒ)

## அல்வாய் வேவிலந்தை ஆலய உற்சவத்தில்

# மின்சார வயரில் சிக்கி அம்மன்பீடம் சாய்ந்தது:

## பக்தர்கள் நால்வர் காயம்

வடமராட்சி,ஜூலை25

அல்வாய், வேவிலந்தை ஆலயத்தில் நேற்று நடைபெற்ற தீர்த்த உற்சவத்தின்போது அம்மன் பீடம் சாய்ந்ததில் அடியார்கள் நால்வர் காயமடைந்தனர்.

அம்மன் விக்கிரகம் தெருவீதி வழியாக வந்தசமயம் குறுக்கே கட்டப்பட்டிருந்த மின்சார வயர் தடக்கியதால் பீடம் சாய்ந்ததாகக் கூறப்படுகிறது.

ஆலயத்தில் இருந்து புறப்பட்ட விக்கிரக பவனி நேற்றுக்காலை வியாபாரிமூலைப் பகுதியில் வந்துகொண்டிருந்தசமயம் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

சாய்ந்து வீழ்ந்த பீடத்தில் சிக்குண்டு அல்வாய் தெற்கைச் சேர்ந்த அன்னலிங்கம் மகேஸ்வரி (வயது53), ஐயம்பிள்ளை பாக்கியம் (வயது 75), விசுவலிங்கம் பாக்கியம் (வயது 65), கணபதிப்பிள்ளை சற்குணதேவி (வயது 55) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த நால்வரும் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோவிலில் இருந்து வியாபாரிமூலை வழியாக இன்பருட்டிக் கடலுக்கு தீர்த்தமாட உழவு இயந்திரத்தில் பக்தர்கள் புடைசூழ சுவாமி சென்றுகொண்டிருந்தார். பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் அங்கு கூடியிருந்தனர்.

சிறிதுநேர தாமதத்தின் பின் அம்மன் விக்கிரகம் மீண்டும் அலங்கரிக்கப்பட்டு பவனி தொடர்ந்தது. தீர்த்த உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. (ஐ-173)





கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான ஆடிவேல் விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

வேல் தாங்கிய தேர், பவனி வருவதை முதற் படத்திலும் -

அலரி மாளிகையின் முன்பாக இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் அதிகாரிகள் ஆடிவேல் பவனியை வரவேற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# நடிகை கஜாலா தற்கொலை முயற்சி நடிகர் அர்ஜுன் காப்பாற்றினார்!


'ஏழுமலை' திரைப்படத்தில் அர்ஜுனுடன் கஜாலா.

ஹைதராபாத்,ஜூலை25

புதுமுக நடிகை கஜாலா தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்தார். நடிகர் அர்ஜுன் அவரை காப்பாற்றி தனியார் மருத்துவமனையில் சேர்த்தார்.

சமீபத்தில் திரைக்கு வந்து ஓடிக்கொண்டிருக்கும் திரைப்படம் 'ஏழுமலை'. இதில் கதாநாயகன் அர்ஜுனின் ஜோடிகளில் ஒருவராக நடித்தவர் கஜாலா. இவர் மும்பையைச் சேர்ந்தவர். தெலுங்குப் படங்களிலும் நடித்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை 'பரத் சிம்ஹா ரெட்டி' என்ற தெலுங்கு படத்தின் படப்பிடிப்பை முடித்துவிட்டு ஹைதராபாத்தில் உள்ள ஒரு தனியார் விருந்தினர் இல்லத்தில் தங்கினார் கஜாலா.

இரவு 12 மணி அளவில் கஜாலா ஏராளமான தூக்கமாத்திரிகளை விழுங்கியது தெரியவந்தது. உடனடியாக செய்தி அறிந்த நடிகர் அர்ஜுன் அவருக்கு முதலுதவி செய்து, தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்த்தார்.

அங்கு மருத்துவர்கள் அவருக்கு தீவிர சிகிச்சையளித்தனர். தற்போது அவர் அபாயக்கட்டத்தைத் தாண்டி விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். கஜாலாவின் தற்கொலை முயற்சிக்கான காரணம் இதுவரை தெரியவில்லை.

ஆயினும் காதல் தோல்வியே தற்கொலை முயற்சிக்குக் காரணம் என்று நம்பப்படுகிறது. (ஒ)

# இஸ்ரேலியப் பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் ராஜினாமா!

டெல்அவிவ்,ஜூலை25

பலஸ்தீனர்களுடன் தொடர்ந்து இஸ்ரேலிய அரசு கடும் போக்கைக் கடைப்பிடித்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்ரேலிய பாதுகாப்புத்துறையின் துணை அமைச்சர் டாலியா ரபீன் பதவி விலகியுள்ளார்.

தற்போது ஆட்சியில் உள்ள தேசிய ஒற்றுமைக் கூட்டணி அரசின் ஆட்சி முடிவுக்கு வந்து விட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இஸ்ரேலின் காலஞ்சென்ற பிரதமர் ரபீனின் மகளே டாலியாரபின் ஆவார். பலஸ்தீனர்களுடன் சமரச முயற்சிகளில் ஈடுபட்டிருந்த ரபீன் 1995 ஆம் ஆண்டில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்த நிலையில் அவரது மகளும 'பலஸ்தீனருடனான உறவை சீர்படுத்திக் கொள்ள இஸ்ரேலிய அரசின் முயற்சிகள் போதுமானவை அல்ல' என்று கூறித் தனது துணை அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இவரது பதவி விலகல் இஸ்ரேலிய அரசின் பலஸ்தீன எதிர்ப்பு நிலைக்கு நெருக்கடியைக் கொடுத்துள்ளதாகக் கருதப்படுகிறது. (ஒ)

# இந்தியா – சிங்கப்பூர் இடையே 3200 கி.மீ. கேபிள் இணைப்பு

சிங்கப்பூர்,ஜூலை25

இந்தியா - சிங்கப்பூரை இணைக்கும் 3 ஆயிரத்து 200 கிலோமீற்றர்கள் கடலுக்கடியில் தொலைத் தொடர்பு கேபிள் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. 2 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் மேலான செலவுள்ள இப்பணியை இந்திய நிறுவனம் ஒன்று செய்து முடித்துள்ளது.

இந்த கேபிள் தொடர்பு அமைக்கப்பட்டதன் மூலம் ஒரே நேரத்தில் தொலைபேசி மூலம் 13 கோடி பேர் இணையத் தொடர்பைப் பயன்படுத்த முடியும்.

இதன் மூலம் ஆசியக் கண்டத்தின் தொலைத் தொடர்புச் சேவை மையமாக சிங்கப்பூர் திகழும் என்று கூறப்படுகிறது. (ஒ)

# பங்குச்சந்தையின் நிலைமை அமெரிக்காவில் படுமோசம்!

அமெரிக்கப் பங்குச் சந்தையில் தொடர்ந்து சரிவு ஏற்பட்டு வருவதால் முதலீட்டாளர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

அமெரிக்கப் பொருளாதாரம் சரிந்து அதனால் உலக அளவில் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சமும் நிலவுகிறது.

பங்குச் சந்தையை சீரமைக்கப் போவதாக அமெரிக்க அதிபர் புஷ் கூறியபோதும் எந்தப் பயனும் ஏற்படவில்லை. டோவ் ஜோன்ஸ் என்ற மிகப் பெரிய நிறுவனத்தின் பங்குகளின் மதிப்பு நேற்று 2.9 சதவீதம் குறைந்து விட்டது. கடந்த 10 நாள்களில் மட்டும் இந்நிறுவன பங்குகளின் மதிப்பு 16 சதவீதம் குறைந்துள்ளது.

அச்சமடைந்துள்ள முதலீட்டாளர்கள் பலர் தங்கள் பங்குகளை அவசர அவசரமாக விற்று வருகின்றனர். பெரிய நிறுவனங்களின் மோசமான செயல்பாடுகளே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (ஒ)

# ஆலங்கட்டி மழைக்கு சீனாவில் 15 பேர் பலி!


ஆலங்கட்டி மழையாகப் பொழிந்த பனிக்கட்டிகள்

பெய்ஜிங்,ஜூலை25

சீனாவில் பெய்த 'ஆலங்கட்டி' மழைக்கு 15 பேர் பலியாகியுள்ளனர். மத்திய பிரதேச மாகாணமான ஹெனனில் கடும் காற்றுடன் பெய்த இந்த ஆலங்கட்டி மழையால் வாகனங்கள் சேதமடைந்தன. மரங்களின் கிளைகள் முறிந்தன. மின்சார விநியோகமும் சீர்குலைந்தது.

ஆலங்கட்டி மழையின் போது ஒருகிலோ எடையுள்ள பனிக் கட்டிகள்கூட விழுந்ததாகக் கூறப்படுகிறது. அத்துடன் விவசாய நிலங்களில் விளைந்திருந்த பயிர்களை ஒருசில நிமிடங்களில் ஆலங்கட்டி மழை சேதமாக்கி விட்டது.

கடும் காற்றுடன் கூடிய இந்த மழையால் கட்டடங்கள் தகர்ந்ததாகவும் - இதனாலேயே உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

ஆலங்கட்டி மழை குறித்து ஹெனன் மாகாண வானிலை ஆராய்ச்சி நிலையம் எச்சரிக்கை விடுத்ததாகவும்

ஆனால், அந்த எச்சரிக்கை மக்களைச் சென்றடைய முன்னரே ஆலங்கட்டி மழைபெய்யத் தொடங்கி விட்டதாகவும் - கூறப்பட்டது. (ஒ)

# ஈராக்கை அமெரிக்கா தாக்கினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்!

## ஈரான் அதிபர் கடாமி எச்சரிக்கை

கோலாலம்பூர்,ஜூலை25

ஈராக் மீது அமெரிக்கா இராணுவ நடவடிக்கை மேற்கொண்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஈரான் அதிபர் மொஹமட் கடாமி.

மலேஷியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அதிபர் கடாமி, அங்கு செய்தியாளர்கள் மத்தியில் பேசிய போதே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஈராக் மீது அமெரிக்கா இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாகக் கூறப்படுவது பற்றி செய்தியாளர்கள் கேட்ட போதே அதிபர் கடாமி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-



ஈராக்கிய மக்களுக்காக அமெரிக்கா முடிவுகளை எடுக்க முடியாது; எடுக்கவும் கூடாது. பலம் வாய்ந்த நாடுகள் மத்திய கிழக்கு விவகாரங்களில் தலையிடுவது போருக்கே வழி வகுக்கும். நாங்கள் போர்ச் சூழலிலேயே வாழ்கின்றோம். ஆனால், அமெரிக்காவில் யுத்த சூழல் நிலவியதில்லை.

அமெரிக்க அதிபர் புஷ், நல்ல நாடுகளுக்கும் சாத்தானின் நாடுகளுக்கும் இடையிலான போர் என்று வர்ணித்துள்ளார். ஆனால் அது, அமெரிக்க நலனுக்கும் சர்வதேச நலனுக்கும் இடையிலான யுத்தமாகவே உள்ளது.

ஈராக்கிய மக்களுக்கு தலைமை தாங்க அமெரிக்கா ஆசைப்படக்கூடாது. அவர்கள் தமது தீர்மானங்களைத் தாங்களே முடிவு செய்துகொள்வார்கள்.

- என்று அவர் தெரிவித்தார்.

# அமெரிக்க எதிர்ப்பு கட்சிகளுடன் பாக்.அதிபர் முஷாரப் சந்திப்பு

இஸ்லாமாபாத்,ஜூலை25

இஸ்லாமியப் பழமைவாதக் கட்சிகள் ஆறின் தலைவர்களை பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் சந்தித்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான போருக்கு இப் பழமைவாத கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இந்த இயக்கங்களுடன உறவை மேம்படுத்தும் முயற்சியாக முஷாரப் இவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

பாகிஸ்தான் அரசின் தொலைக்காட்சி இந்த நிகழ்ச்சியை ஒளிபரப்பியது. 'பாகிஸ்தானை இஸ்லாமிய நாடாக வழிநடத்திச் செல்வேன்' என்று இச் சந்திப்பின்போது முஷாரப் உறுதி அளித்ததாக அத்தலைவர்களில் ஒருவரான அல்லாமாஷா அகமது நூரானி கூறினார்.

'இஸ்லாமிய நாடாகத்தான் பாகிஸ்தான் பிறந்தது. இந்த நாட்டை இஸ்லாத்திலிருந்து மாற்ற யாருக்கும் அதிகாரம் இல்லை' என்று தங்களிடம் முஷாரப் கூறியதாக அத்தலைவர் கூறினார்.

தீவிரவாதத்துக்கு எதிராகத் தான் எடுத்துவரும் நடவடிக்கை இஸ்லாமிய கொள்கையிலிருந்து விலகிச் செல்வதாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டையும் முஷாரப் மறுத்தார். இது போன்ற தகவல்களில் உண்மை ஏதும் இல்லை என்றும் அவர் கூறினார்.

ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் இத்தலைவர்களின் கட்சிகள் பங்கேற்க முழு உரிமை உள்ளது என்றும் முஷாரப் கூறினார்.

இச்சந்திப்பின்போது மதவாத கட்சிகளின் தலைவர்கள் முஷாரப்பிடம் மனு அளித்தனர். அதில் தங்களுக்கு உள்ள குறைகளையும், தேர்தல் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

முஷாரப்பைச் சந்தித்த இத்தலைவர்களின் 6 கட்சிகளும் முத்தாகிதா மஜலிஸ் இ அமால் அரசியல் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன. (ஒ)


காஸாவில் இஸ்ரேலிய விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் பலியானவர்களின் இறுதி ஊர்வலத்தில் ஆயுதங்களை ஏந்திய படி ஆக்ரோஷத்துடன் செல்லும் பலஸ்தீனச் சிறுவர்களைப் படத்தில் காணலாம்.

## சவூதி இளவரசர் மீது குற்றச்சாட்டு

லண்டன்,ஜூலை25

சவூதி அரேபிய இளவரசர் நயப்பின சுல்தான் பின் பௌவாஸ் அல் சாவுட் கொகெய்ன் எனும் போதைப் பொருளை வெனிசூலாவிலிருந்து பிரான்ஸுக்கு கடத்தியதாக அமெரிக்கப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இளவரசரின் பிரத்தியேக ஜெட் விமானத்தைப் பயன்படுத்தி 1999 ஆம் ஆண்டு இந்தக் கடத்தல் நடத்தப்பட்டதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ)

# இந்தியாவில் நாசவேலையில் ஈடுபட 25 மனித வெடி குண்டுகள் ஊடுருவல்!

## மத்திய உளவு பிரிவு பொலீஸ் எச்சரிக்கை

சென்னை,ஜூலை25

இந்தியாவில் நாசவேலையில் ஈடுபட 25 மனித வெடிகுண்டுகள் ஊடுருவி இருப்பதாக மத்திய உளவு பிரிவு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதைத் தொடர்ந்து சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு இருக்கிறது.

நாட்டுக்குள் தீவிரவாதிகள் ஊடுருவலைத் தடுக்க மத்திய உளவு பிரிவு பொலீஸார்(ஐ.பி.) மிக தீவிரமாகப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் அவர்கள் இந்தியா முழுவதிலும் உள்ள பொலீஸ் உயர் அதிகாரிகளுக்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

'ஏமன் நாட்டைச் சேர்ந்த தீவிரவாதி பத்ருலிதீன் தலைமையில் ஜெய்ஸ் இ முகம்மது, அல்கெய்டா, லஸ்கர் இ தொய்பா ஆகிய தீவிரவாத அமைப்புகளை சேர்ந்த 25 தீவிரவாதிகள் மனித வெடிகுண்டுகளாக ஜம்மு காஷ்மீருக்குள் ஊடுருவி இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இவர்கள் ஜம்மு காஷ்மீரில் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது என்று அவர்களுக்கு அவர்களது தலைமையால் உத்தரவிடப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

இந்தப் பயங்கரவாதிகளின் குறி டெல்லி, மும்பை, சென்னை, கொல்கொத்தா உட்பட பெரிய நகரங்களில் உள்ள முக்கிய பிரமுகர்கள் தான்.

எனவே, முக்கிய பிரமுகர்களின் வீடுகள், அலுவலகங்கள் மற்றும் அவர்கள் செல்லும் இடங்களில் அளிக்கப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளை உடனடியாக ஆய்வு செய்து பாதுகாப்பை பலப்படுத்தவேண்டும்.

தமிழ்நாட்டில் தீவிரவாதி இமாம் அலி தப்பிச் சென்றதையும் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தத் தீவிரவாதியாலும் முக்கிய பிரமுகர்கள் உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது.

இதேபோல விடுதலைப் புலிகள், தமிழ்நாடு விடுதலைப்படை, தமிழ்த் தேசிய மீட்புப் படை போன்ற தமிழ்த் தீவிரவாத இயக்கங்களாலும், சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து மிக முக்கிய பிரமுகர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய உளவு பிரிவு பொலீஸாரிடம் இருந்து வந்த இந்தக் கடிதம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உயர் அதிகாரிகள் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் பலப்படுத்துவது குறித்து ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள், மிக முக்கிய பிரமுகர்கள் செல்லும் இடங்களெல்லாம் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

2பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கி.கந்தசாமி, மயிலுவீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.(6312)

**Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் இன்று மாலை பெற்றுக்கொள்ளலாம். முதல்நாள் தடுப்பு மருந்து இலவசமாக தரப்படும். தொடர்பு:- இல.19, முருகேசர் ஒழுங்கை. முத்திரைச் சந்தையடி, நல்லூர். (6274)

ஒரு சில மாதங்கள் பாவித்த இரண்டு ஜெனரேட்டர்கள் (5K.V.) விற்பனைக்கு உண்டு. தொடர்புகட்கு: இல.422, காலி வீதி, கொழும்பு-03. தொலைபேசி இல:- 075-539596/ 074-719692, விஜித்/நிர்மலி. (C/22998)

சித்தங்கேணியில் மாதர் சங்க ஒழுங்கையில் 8பரப்புடன் வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.கணநாதன், சங்கானை பார்மசி, சங்கானை. (6344)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. கொள்வனவுகளுக்கு ஏற்ப விசேட விலைக்கழிவு வழங்கப்படும். தினமும் சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக்குளம், முன்பாக, கட்டப்பிராய். (6261)

## வீடு விற்பனைக்கு

இல.175, முதலாம் குறுக்குத் தெருவில் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் இலங்கை வங்கிக்கும் அண்மையில் 1/2 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி தம்பிப்பிள்ளை, இல.175, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (6343)

## தவறிவிட்டது

6ஆம் வட்டாரம், நயினாதீவைச் சேர்ந்த செல்லப்பா குகதாசன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 451060368V), விசேட அ.அ. (இல. 091202205) என்பன யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்நகரப் பகுதியில் உள்ள மணிகுரல் விளம்பர சேவையில் ஒப்படைத்துதவவும். (6328)

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த மயில்வாகனம் ஜெயக்குமார் என்பவருடைய தே.அ.அ. (இல.671200217V), தொழில் அடையாள அட்டை என்பன முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நல்லூர் பல.நோ.கூ.சங்க தலைமைக் காரியாலயம், திருநெல்வேலியில் ஒப்படைக்கவும். (6330)

புகையிரத வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த இராசரத்தினம் இரவி என்பவரது மோட்டார் சைக்கிள் புத்தகம் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும், சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (6281)

## வாடகைக்கு தேவை

யாழ்குடாநாட்டில் ஒரு அறை அல்லது அனெக்ஸ் சகல வசதிகளுடனும் வாடகைக்குத் தேவை. தொடர்பு: S.ருபினி, T.P. 3462 (6342)

## வீடு தேவை

திருநெல்வேலிச் சந்திக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடைப்பட்ட பலாலி வீதியை அண்டிய பகுதியில் நிலத்துடன் கூடிய வீடு ஒன்று தொழில முயற்சிக்கு குத்தகைக்குத் தேவை. தொடர்பு: விளம்பர இல.1578,மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (6321)

## ஒரு காதலின் கதை

இலங்கை இனப்பிரச்சினையின் ஆரம்ப காலத்தைச் சித்திரிக்கும் நாவல். உங்களுக்குத் தெரியாத பல வரலாற்று நிகழ்வுகளைக் கொண்டது. 350 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இரண்டாவது நாவல். (6318)

## திருமண சேவை

1970, அனுஷம், **Technical Officer**, சைவபோசன மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. **Donation** எதிர்பார்க்கப்படும். மணமகன் பொறியியல் பட்டப்படிப்பு இறுதி யாண்டு. தொடர்பு: துரை விமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (6336)

## கருத்தரங்கு

கொழும்புத்துறை,ஜூலை25

கொழும்புத்துறை ஜே-62, ஜே-63 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கான மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்புத்துறை கிராம அலுவலரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-ரி)

# 3ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30 - 09 - 1966 | 29 - 07 - 1999 |

## இராசரத்தினம் ஜெயக்குமார் (குமார்)

*திதி: 25-07-2002*

மூன்று ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது உம் துயரம்
இதயக் கோவிலில் என்றென்றும் - உங்கள்
நினைவுத் தீபத்தை ஏற்றி வைப்போம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*44, புகையிரத வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

- குடும்பத்தினர்.

(6339)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 - 09 - 1930 | 25 - 06 - 2002 |

## அமரர் தம்பையா பரநிருபசிங்கம்

*(ஓய்வுபெற்ற அதிபர்)*

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டி எம்மை
வாழவைத்த தெய்வமே! - எங்கள்
இதயக் கோயிலில் என்றென்றும் - உங்கள்
நினைவுத் தீபத்தை ஏற்றிவைப்போம்!

இன்று (25.07.2002) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*7ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

(6282)

- பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி தம்பிராசா அன்னலட்சுமி

காங்கேசன்துறை வீதி, இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி தம்பிராசா அன்னலட்சுமி கடந்த 21.07.2002 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குமாரு - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் தம்பிராசாவின் (மன்னார் எக்ஸ்பிரஸ், சுன்னாகம் - கண்ணன் அரிசியாலை உரிமையாளர்) அன்பு மனைவியும் பாதுஷா (இந்தியா), பகீரதன், காலஞ்சென்ற ஸ்ரீதரன், தவேந்திரன் மற்றும் சிவேஸ்வரன் (சிவா), வாசுகி (கனடா), சுகந்தி (கனடா), ஜெயந்தி (கனடா), ராஜன் (சுதர்சன் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆனந்தநடராஜா (சுவிஸ்), ஸ்ரீரஜனி, சரோஜினி, ஈஸ்வரன் (கனடா), சிவா (கனடா - சிவாஸ் ரேடிங்), சிவம் (கனடா), வதனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கௌசல்யா (இந்தியா), மாயவன் (இந்தியா), தர்ஷன், சயந்தன், கோபி, கீர்த்தி, ஜனகன், சீவகன, ஸ்ரீராம், சோபிதா, கல்பனா (கனடா), விஷ்ணு (கனடா), லக்சுமி (கனடா), மீனாட்சி (கனடா), வர்மன் (கனடா), அக்ஷயன் (கனடா), சுரம்பியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-07-2002) வியாழக்கிழமை காலை 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*காங்கேசன்துறை வீதி,*
*இணுவில்.*

(6345)

தகவல்: தம்பிராசா
*(மன்னார் எக்ஸ்பிரஸ் உரிமையாளர்)*

# வெளிவந்து விட்டது

விரைவில் நடைபெறவுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவை **SLEAS** பரீட்சார்த்திகள் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க

## கல்வியியலில் விடய ஆய்வு

## " Case Study In Education"

நூலாசிரியர்: **திரு. பா.தனபாலன்** (உப பீடாதிபதி)
*கல்வியும் தரமேம்பாடும் - யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி*

கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையின் விடய ஆய்வு அணுகுமுறைகள், ஆசிரியர் கல்வித்துறை விடய ஆய்வுகள், *கடந்த கால கல்வி நிர்வாக சேவை விடய ஆய்வுப் பரீட்சை வினாத்தாள்கள் - வழிகாட்டல் விடைகளுடன்*, கல்வி முகாமைத்துவ விடயங்களும் அடங்கிய நூல்.

ஆசிரிய பயிலுநர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய கல்வியியலாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப கல்வியியல் எழுத்தாளரும் ஆய்வாளருமான **திரு.பா.தனபாலன்** அவர்களால் எழுதப்பட்டு இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே நேரத்தில் பின்வரும் நூல்கள் வெளிவரவுள்ளன.

- நவீன கல்வித் தொழில்நுட்பம்
- கல்விப் பரீட்சியம்
- பாடசாலை முகாமையும் தகவல் தொழில்நுட்பமும்,
- நவீன கற்றல் - கற்பித்தல் முறையியல்கள்
- ஈழத்தமிழர் தேசியம்,

இ...்கை முழுவதற்குமான ஏக விநியோகஸ்தர்கள்:

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
**234, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.** தொலைபேசி இல.: 021-2573

(6293)

# நினைவலைகள்

| ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி | இரண்டாம்ஆண்டு நினைவஞ்சலி |
|---|---|





| திருமதி அட்ஷயலிங்கம் சரஸ்வதிதேவி | | அமரர் வைரமுத்து அட்ஷயலிங்கம் (தபாலதிபர்) |
|---|---|---|
| 18-05-1933 | மலர்வு | 09-05-1932 |
| 23-04-1993 | உதிர்வு | 17-07-2000 |

**திதி: 25-07-2002 (அபரபக்கத்து பிரதமை)**

*அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமே!*
*எம்மை வையத்துள் வாழ்வாங்கு*
*வாழவைத்த அன்புத் தெய்வங்களே!*
*ஆண்டுகள் பல ஆயிடினும்*
*ஆறிடுமோ எம் துயரம்?*

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*"அட்ஷய பவன"*
*தும்பளை,*
*பருத்தித்துறை.*

(C/23045)

பிரிவால் வாடும்:
**பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளை.**

உதயன்

## அதிர்ச்சி தந்த அறிவிப்பு

அமெரிக்காவில் வைத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி அமைதியை விரும்பும் ஈழத்தமிழ் மக்களுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.

அமைதிக்கான சமாதான முயற்சிகளில் 'வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைந்த கதையை' இந்தப் பேட்டி தோற்றுவித்து விடுமோ என்ற அச்சம் அவர்களுக்கு.

உரிமைகள் மறுக்கப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் அதற்காக அஹிம்சை வழியில் - சாத்வீக முறையில் - சுமார் மூன்று தசாப்த காலம் போராடியதும், அந்தப் போராட்டங்கள் பலாத்காரத்தால் - ஆயுத முனையில் - அடக்கி ஒடுக்கப்பட்டதால் வேறுவழியின்றி, தங்கள் நியாயமான - அடிப்படையான - உரிமைகளைப் பெறுவதற்காகவும், அடிமைத்தளையிலிருந்து மீளுவதற்காகவும் ஆயுதம் தூக்கிப் போராடத் தொடங்கியதும் முடிந்துபோன சரித்திரங்கள்.

அந்தச் சரித்திரத்தை மறைத்து - தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குகின்றோம் என்ற பெயரில் தமிழ்மக்கள் மீது கடந்த இரண்டு தசாப்தங்களாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த அரச பயங்கரவாதத்தை மறைத்து - புலிகளைப் பெரும் பயங்கரவாதிகளாக வர்ணித்து, அமெரிக்கா முதலிய சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாகவே வேறு மார்க்கமின்றி புலிகள் பேச்சுக்கு இணங்கியிருக்கின்றார்கள் என்ற சாரப்பட அமெரிககாவில் வைத்து நீட்டி முழங்கியிருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

சமாதானத்துக்காகப் போர் நடத்தியதாக முழங்கிய ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு அல்லது அவர் போன்ற இரண்டாம் மட்ட சிங்களத் தலைவர்களுக்கு இவ்வாறு கருத்துக் கூறுவது - அதுவும் இந்தச் சந்தர்ப்பத்தில் - பொருத்தமானதாக இருக்கலாம்.

ஆனால், புலிகளுடன் சமரசம் பேசி, யுத்தத்தை நிறுத்தி, இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண முயலும் இணக்கப்போக்குடையவர் என்று தனது பெயரை அண்மைக் காலத்தில் கட்டி வளர்த்திருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின செயற்பாட்டுக்கு இது அறவே பொருத்தமற்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமரசப் பேச்சுக்கள் ஆரம்பமாக முன்னர், இருதரப்பினர் இடையேயும் - தமிழர், சிங்களவர்கள் இடையே - அரசு, புலிகள் இடையே - நல்லெண்ணப் புறச்சூழ நிலை கட்டி வளர்க்கப்படவேண்டும். அப்படியான நல்லெண்ணப் புறச்சூழ்நிலையும், தமிழர் தாயகத்தில் இயல்பு வாழ்க்கையும் பேணப்பட்டால்தான், புற அழுத்தங்களின்றி அமைதிப் பேச்சை நடத்தவும், அதன்மூலம் இணக்கத் தீர்வு ஏற்படவும் வாய்ப்புக்கிட்டும் என்று புலிகள் அடிக்கடி கூறிவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

புலிகள் குறித்து பிரதமர் ரணிலும், பிரதமர் ரணில் குறித்து புலிகளின் தலைமைத்துவமும் இதுவரை காலமும் பேணி வந்த கண்ணியப்போக்கை சிதறடிக்கும் வகையில் புலிகளை மிகக் கொடூரப் பயங்கரவாதிகளாக சித்திரித்து ரணில் கருத்து வெளியிட்டிருப்பது தற்போதைய சமாதானப் பேச்சுக்கு இடையூறு விளைவிப்பதாக அமையும் என்பது நிச்சயம்.

இதுவரை காலமும் புலிகள் தொடர்பாக மிதமான போக்கைக் கடைப்பிடித்து வந்த பிரதமர் ரணில், அமெரிக்கா போய் அங்குள்ள அதிகாரிகள் மற்றும் தலைவர்களுடன் பேசியதும் தமது சுருதியை தலைகீழாக மாற்றியிருப்பதும், அது தொடர்பான பின்னணிகள் குறித்துத் தமிழர்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தத் தொடங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கவை.

தமிழருக்கு சமூக, பொருளாதார, கலாசார விடயங்களில்தான் அதிகார பகிர்வு என்று அவர் குறிப்பிட்டதன்மூலம் அரசியல், நிர்வாக விடயங்களில் அதிகாரப் பகிர்வு வழங்கும் எண்ணம் அவருக்கும் அவரது அரசுக்கும் இல்லை என்பதை அவர் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

இந்தத் தெளிவு, இந்த அமைதிப் பேச்சு முயற்சியை இன்னும் தொடர்வதில் அர்த்தம் ஏதும் உண்டா என்ற கேள்வியை தமிழர் தரப்பில் கிளப்பியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## நஷ்டஈட்டு விண்ணப்பம் குறித்து

# மாகாணத் திணைக்களங்களின் பணிப்பு விசனம் ஏற்படுத்துகின்றது!

## அரச ஊழியர்கள் தெரிவிப்பு

தென்மராட்சி,ஜூலை25

நஷ்டஈட்டு விண்ணப்பம் குறித்து வடக்கு - கிழக்கு மாகாணத திணைக்களங்கள் அனுப்பியுள்ள அறிவுறுத்தல் விசனத்தை ஏறபடுத்தியுள்ளதாக அரச ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களில் கடந்த 1999 டிசெம்பர் மாதத்தின பின்னர் யுத்த அனர்த்தங்களால் வீடுகள், சொத்துக்கள் ஆகியவற்றை இழந்த அரச ஊழியர்கள் அனுப்பிய நஷ்டஈட்டு விணணப்பங்களை அனுப்புவதில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணத்தை அந்தந்தப் பகுதி பிரதேச செயலரினால் உறுதிப்படுத்தி அதற்கான கடிதத்தை தமக்கு அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்குத் திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண திணைக்களங்களால் அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இப்பிரதேசங்களில் இடம்பெற்ற யுத்த அவலங்கள், இடப்பெயர்வுகள், மீளக் குடியமர்வு காலம் பற்றிய நிலைமைகள் வடக்கு - கிழக்கு மாகாண திணைக்கள அதிகாரிகளுக்குத் தெரிந்தும் இவ்வாறான விளக்கம் கோரப்படுவது குறித்து அரச உத்தியோகத்தர்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

யுத்த அவலங்களால் வெளியேறிய மக்கள் எவ்வளவு காலதற்குப் பின்னர் மீளக் குடியமர்ந்தனர் என்ற விவரத்தினை அந்தந்தப் பிரதேச செயலகங்கள் மூலம் உறுதிப்படுத்த திணைக்கள அதிகாரிகள் முயற்சி செய்யாமல் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்குச் செலவுகளை ஏற்படுத்த முயல்வது கவலையளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யுத்த அவலத்தினால் பாதிக்கப்பட்ட தனங்களப்பு, மறவன்புலோ, எழுதுமட்டுவாழ் வடக்கு, தெற்கு, ஒட்டுவெளி, கிளாலி, முகமாலை, நாகர்கோவில் போன்ற பகுதிகளில் உள்ள வீடுகளைப் பார்வையிட இன்னமும் அனுமதிக்கப்படவில்லை. இந்தப் பகுதிகளுக்கு மக்கள் செல்ல எப்போது அனுமதிப்பார்கள் என்ற விவரம் இன்னமும் முடிவாகவில்லை. இந்த நிலையில் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் தமக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நட்டஈடு கோரி விண்ணப்பிப்பதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பது தெரியாத நிலையில் உள்ளனர்.

யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் மக்கள் வெளியேறிய திகதி, எந்தப் பகுதிகளில் எந்தெந்தக் காலங்களில் பார்வையிடவோ அல்லது மீளக்குடியமரவோ அனுமதிக்கப்பட்டனர் என்ற விவரம் ஆகியவற்றை அந்தந்தப் பிரதேச செயலகங்களிடமிருந்து பெற்றபின்னர் வடக்கு - கிழக்கு மாகாண திணைக்களங்கள் அதன்பின்னர் ஏற்படும் தாமதம் பற்றி விளக்கம் கோரலாம் என அரச ஊழியர்கள் கருதுகின்றனர்.

இழப்பீடு கோரும் விண்ணப்பத்துடன் அனுப்பப்படும் பொலீஸ் முறைப்பாட்டு அறிக்கை, சேதவிவரம் பற்றி பொறியியலாளரிடம் பெறப்படும் மதிப்பீடு, தேர்தல் திணைக்களத்திடமிருந்து பெறப்படும் வாக்காளர் பட்டியல் பிரதி, காணி அலுவலகத்திலிருந்து பெறப்படும் உறுதி போன்றவற்றுக்கு விண்ணப்பித்து அவை கிடைக்கும் காலங்கள் போன்றவற்றையும், இவற்றினைப் பெறுவதற்கு உத்தியோகத்தர்கள் எவ்வளவு சிரமங்களை, அலைச்சல்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும் கருத்திற்கொள்ளாது விண்ணப்பம் அனுப்புவதில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணத்தை உறுதிப்படுத்தி அனுப்புமாறு விளக்கம் கோரப்பட்டுள்ளமை உத்தியோகத்தர்கள் மத்தியில் பெரும் கவலையளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இழந்தவை ஒருபுறமிருக்க, அதற்கான நஷ்டஈடு பெற பெருந்தொகையைச் செலவழிக்க வேண்டியுள்ளது - எனவும் அரச ஊழியர்கள் தெரிவித்தனர். (ஒ-117)

## வாக்காளர் பட்டியல் பிரதிபெற தற்போது புதிய நடைமுறையாம்

வாக்காளர் பட்டியல் பிரதிகளுக்கு விண்ணப்பிப்போருக்கு அவர்களது விண்ணப்பங்கள் கொழும்பு தேர்தல் திணைக்கள ஆணையாளர் அலுவலகத்தின் அங்கீகாரம் பெற்றே பிரதிகள் வழங்கப்படும் என யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்கள ஆணையாளர் எஸ்.நடராசா தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக விளக்கம் அளிக்கையில் -

"வாக்காளர் பட்டியல் பிரதிகளுக்கு விண்ணப்பத்தோருக்கு இதுவரைகாலமும் நாம் பிரதிகளை வழங்கி வந்தோம்.

"ஆனால், தேர்தல் திணைக்கள ஆணையாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்தின்படி இம்மாதம் 15ஆம் திகதி தொடக்கம் வாக்காளர் பட்டியல் பிரதிக்கு விண்ணப்பிப்போரது விண்ணப்பங்கள் தேர்தல் திணைக்கள ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டாலேயே, அந்த விண்ணப்பதாரிக்கு பிரதி வழங்கப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

"இதனால் விண்ணப்பதாரிகள் முழு விவரங்களுடனும் வாக்காளர் பட்டியல் பிரதி தேவைப்படும் திணைக்களத்தின் கடிதத்துடன் தமக்குச் சமர்ப்பித்தால் நாம் அந்த விண்ணப்பத்தை கொழும்பு அனுப்பி அங்கீகாரம்பெற்ற பின்னர் பிரதிகளை வழங்கமுடியும்" - என்று அவர் கூறினார். (ஒ-180)

## பொறிவைத்தது எதிரிக்கு; எமனானது சகோதரருக்கு!

கொழும்பு,ஜூலை25

எதிரியைத் தாக்கச்சென்ற சகோதரர்கள், தங்களுக்குள்மோதி உயிரைவிட்ட சம்பவமொன்று பிபில பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பிபில பிரதேசத்தில் உள்ள கிராமம் ஒன்றில் தமது தகப்பனைத் தாக்கிய நபரொருவரைப் பழிவாங்கச் சென்ற சகோதரர்கள் இருட்டில் அடையாளம் தெரியாமல் ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ள - அண்ணன், தம்பியைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டார்.

இருட்டில் கட்டிப்புரண்டபோது எதிரியை விட்டுவிட்டு தம்பியைத் தவறுதலாகக் குத்திக் கொன்றுவிட்டதாக அண்ணன் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார். விசாரணையை மேற்கொண்ட பொலீஸார், மதுபோதையால் ஏற்பட்ட சண்டை கொலையில் முடிந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (ஒ)

## முன்னாள் வான்படைத் தளபதிக்கு லஞ்ச ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு,ஜூலை25

பதவிவிலகிய விமானப் படைத் தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஜயலத் வீரக்கொடியை லஞ்ச ஆணையாளர் முன் எதிர்வரும் 29ஆம் திகதி ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விமானப் படைக்கு எழுபது லட்சம் ரூபா பெறுமதியான 'பென்ஸ்' கார் கொள்வனவு செய்தது தொடர்பில் ஊழல் நடந்திருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணைகளுக்காகவே அவர் அழைக்கப்பட்டுள்ளார். கடந்த 19ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தபோதும் ஜயலத் வீரக்கொடி கால அவகாசம் கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## சர்வதேச கொடுக்கல் வாங்கலில்

## மக்கள் வங்கிக்கு அரசு இனிமேல் பிணைநிற்காது!

கொழும்பு,ஜூலை25

கடுமையான நிதிப் பிரச்சினையை எதிர்நோக்கும் மக்கள் வங்கியின் சர்வதேச நிதிக்கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை அரசு மக்கள் வங்கிக்காகப் பிணையாளராக நின்றதன் பேரிலேயே நடைபெற்று வந்தன.

ஆனால், கடந்த 17ஆம் திகதியில் இருந்து மக்கள் வங்கிக்காகப் பிணையாளராக நிற்பதிலிருந்து அரசு விலகிக்கொள்வதாகத் தீர்மானித்துள்ளது.

அரசின் இந்த முடிவை அடுத்து மக்கள் வங்கியின் எதிர்காலச் செயற்பாடுகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்தும் -

அது தொடர்பாக அரசு அனுசரிக்க உள்ள கொள்கை குறித்தும் -

விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (ஒ)

### நாளை

ஆடி 10
வெள்ளிக்கிழமை
(26.07.2002)
திதி : துதியை
பிற்பகல் 4.31 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
முன்னிரவு 11.28 வரை.
சுபநாள்
சுபநேரம் : 6.03 - 7.33
ராகுகாலம் : 10.32 - 12.02
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நினைப்பது நினைத்த நேரத்தில் நினைத்தமாதிரி நடக்காமல் போவதே வாழ்க்கையின் சுவாரசியம்.

## நியமனம் வழங்கப்பட்ட

## ஆசிரியர் கடமையேற்கத் தவறின் அந்த இடம் காத்திருப்போருக்கு!

கொழும்பு,ஜூலை25

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் கடமையாற்றவென நியமிக்கப்படவுள்ள ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களில் 743 பேருக்கான நியமனங்கள் தற்போது வழங்கப்பட்டு, கடந்த 15ஆம் திகதி முதல் கடமையேற்று வருகின்றனர்.

நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன் கடமையேற்கத் தவறின் அவர்களது வெற்றிடங்களுக்குக் காத்திருப்போர் பட்டியலிலிருந்து நியமனங்கள் வழங்கப்படும் என மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட சனத்தொகை விகிதாசாரத்திற்கேற்ப வழங்கப்பட்டுள்ள 743 நியமனங்களில் யாழ்ப்பாணம் - 280, அம்பாறை - 139, மட்டக்களப்பு - 114, திருகோணமலை - 78 என அதிக எண்ணிக்கையானோரும், ஏனைய 132 பேரும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எஞ்சிய 257 நியமனங்களும் டிசெம்பருக்கு முன் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ஒ)

## திரிபோஷாவில் வண்டு; தாய்மார்கள் கவலை!

இம்முறை குழந்தைகளுக்கு போஷாக்கு உணவாக அரசினால் வழங்கப்பட்ட திரிபோஷா மாவில் வண்டுகள் காணப்படுவதாக தாய்மார்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுகாதார சேய் நலன்பேணல் நிலையம் ஒன்றில் வழங்கப்பட்ட போஷாக்கு மா பைகள் பலவற்றில் வண்டுகள் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தாய், சேய் உடல் நலத்தை மேம்படுத்த வழங்கப்படும் போஷாக்கு மாவில் வண்டுகள் காணப்படுவது குறித்து அதிகாரிகள் அசட்டையாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

கடந்த தடவையும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட திரிபோஷா மாவில் வண்டுகள் இருந்ததாகவும் - பல பைகள் உடைந்திருந்ததாகவும் -

பல பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட சுகாதாரப் பகுதி உத்தியோகஸ்தர்களுக்கு அறியப்படுத்தியும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. திரிபோஷா மா குழந்தைகளுக்கும் போசாக்கற்ற கர்ப்பிணிகளுக்கும் சுகாதார அமைச்சினால் இலவசமாக நாடெங்கும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-180)

மிக நுட்பமானதும் திறமையான செயற்பாடும் கொண்ட இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்

மிகச் சிறந்த தரம்மிக்க, புதி மற்றும் மறுசீரமைக்கப்பட்ட இயந்திரங்கள் நம்ப முடியாத விலையில்



- Lathe machines
- Injection moulding machines
- Shapers & surface grinders
- Sheet bending & cutting machines
- Vertical & horizontal milling machines
- Drilling machines



எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விற்பனைக்கு பிந்திய சேவை வழங்கப்படும்

இலங்கையில் மிகப்பெரிய கையிருப்பைக் கொண்ட நிறுவனம்
Bhathiya Trading Company
PRIVATE LIMITED
Office 7, Katukurunduwatta Road, Ratmalana, Sri Lanka.
Tel: 622402,622403,729820. Fax:94-1-713625, 074-210781
Factory 7D, Postmasters Place, Mt. Lavinia, Sri Lanka. Tel: 729798
E. mail bhathiya@itmin.com. (C/22935)

# தபாற்கட்டை சந்தை புனரமைப்பு

கொழும்புத்துறை,ஜூலை25

யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த அரியாலை தபாற்கட்டைச் சந்தை புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அப்பகுதியில் தற்போது துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினர் யாழ்.மாநகர ஆணையாளரிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து இப்புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் -

இதனால் இப்பகுதிகளில் மீளக் குடியமர்வோர் பெரிதும் பயனடைவர் எனவும் -

தெரிவிக்கப்படுகிறது. (ஒ-ரி)

# வெங்காயப் பயிரில் நோய்த்தாக்கம்

சண்டிலிப்பாய்,ஜூலை25

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்ட வைகாசிப் போக வெங்காய செய்கை பனிப்பூச்சி தாக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வெங்காயப் பயிர்களின் தலைகள் இந்த பனிப்பூச்சி தாக்கத்தினால் பழுத்துக் கருகி வருவதாகவும், இதனைக் கட்டுப்படுத்துவதற்கேற்ற கிருமிநாசினி விசிறியும் பலன் ஏற்படவில்லை என்றும் விவசாயிகளில் பலர் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-135)

# வத்திகான் வானொலி அதிகாரி யாழ்.வருகிறார்

கொழும்புத்துறை,ஜூலை25

வத்திகான் வானொலி சேவையின் தமிழ் ஒலிபரப்பின் இந்திய தெற்காசிய பகுதிகளுக்குப் பொறுப்பான இயக்குநர் அருள்திரு.அல்பி பென் அடிகளார் நாளை 26ஆம் திகதி இலங்கை வருகிறார்.

வத்திகான் வானொலி பற்றிய கருத்துக்களை அறிந்துகொள்ளவும், தமிழ்மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்குச் சென்று கருத்துக் கணிப்பொன்றை மேற்கொள்ளவும் இவர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வத்திகான் வானொலியின் இலங்கைத் தமிழ்ப் பிரதேச தொடர்பாளரான அருள்திரு.ஜெரிபெல் கிருபாகரன் அடிகள் வத்திகான் இந்தியப் பிரிவு இயக்குநரின் யாழ்.வருகைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-ரி)

நீண்ட கால அச்சுப்பதிப்பிற்கு நுட்பமானதும் உற்பத்தித்திறன் கூடியதுமான இயந்திரங்கள்

Machines and accessories avilable
- Heidelberg(KORD/SORD/SORDZ)
- RYOBI/HAMADA/DAVIDSON
- Paper cutters
- Wire stitchers
- Plate Makers
- Laminating machines
- Corrugated box making machines

அனைத்து வகையான புதிய மற்றும் மறுசீரமைக்கப்பட்ட அச்சு இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்



Products for the press room
- Printing Plates
- Press room chemicals
- Printing inks
- Blankets/Jackets



எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விற்பனைக்கு பிந்திய சேவை வழங்கப்படும்

இலங்கையில் மிகப்பெரிய கையிருப்பைக் கொண்ட நிறுவனம்
Bhathiya Trading Company
PRIVATE LIMITED
Office 7, Katukurunduwatta Road, Ratmalana, Sri Lanka.
Tel: 622402,622403,729820. Fax:94-1-713625, 074-210781
Factory 7D, Postmasters Place, Mt. Lavinia, Sri Lanka. Tel: 729798
E. mail bhathiya@itmin.com (C/22933)

## பசுமை நிறைந்த நினைவின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1945 - 07 - 31



அலர்வு 2000 - 07 - 25

## அமரர் கிருபைரட்ணம் ஜெயசீலன்

*(கிராம அலுவலர், துன்னாலை கிழக்கு, ஜே/371)*

2002.07.25

பாசமுள்ள எங்கள் அருமை அப்பாவே!
பாசமுற எமை அரவணைத்து வளர்த்தாயே!
நேசமுறு மனையாள் பிள்ளைகள் நாமும்
நேசமுடன் நினைவு கொண்டோமே!
இரண்டாண்டு நீ மறைந்து சென்றாலும்
இரட்சகர் கர்த்தரின் அருள் பெற்றே
இரந்தே வேண்டுதல் செய்கின்றோம்
நினதான்மா சாந்திபெற விழைந்தே.

ஆக்கம்: யாழோன்

*அணிஞ்சிலடி,*
*துன்னாலை மேற்கு,*
*கரவெட்டி.*

நினைவகலா
மனையாளும், பிள்ளைகளும்.

(C-23022)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 - 01 - 1922



உதிர்வு 25 - 07 - 2001

## அமரர் கபிரியேல் பேர்னாண்டோ செபஸ்ரியன்

(இளைப்பாறிய P.W.D. ஓவசியர்)

*ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம் சோகம்.*
*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

- பிரிவால் துயருறும்:

*54, ஈச்சமோட்டை கடற்கரை வீதி,*
*பாஷையூர், யாழ்ப்பாணம்.*

பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள், பெறாமகன்.

(C/23011)

FREE




அனைத்து ப்ரஸியா 50g கிறீமுடன்,
ரூ. 20.00 பெறுமதியான
சினால் சோப் இலவசம்

மரமஞ்சல் - சருமத்தை பொலிவாக்குவதுடன் மென்மையாகவும், அழகாகவும் செய்கிறது.
முருகல் மரம் வெண்ணெய் - சருமத்தில் ஏற்படும் காயங்கள், வெடிப்புகள் என்பவற்றை குணமாக்குவதுடன், சருமத்தை மிருதுவாக்குகிறது.
வெண் சந்தனம் - மேனியைக் குளிர்ச்சியாக்கி, சரும நோய்களிலிருந்தும் பாதுகாக்கிறது.

PHARMCO MARKETING SERVICES (PVT) LTD

(C/23040)




நல்லதொரு மாற்றத்துக்கு சக்திமிகு நம்பிக்கை

No.1 CEMENT IN SRI LANKA

MITSUI CEMENT



கறுப்பு ஜுலை தினத்தை நினைவுபடுத்தியும், சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரியும், விடுதலைக்காக அவர்கள் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், தமிழகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள ம.தி.மு.க.பொதுச்செயலாளர் வைகோவை விடுவிக்கக் கோரியும் தமிழர் கூட்டமைப்பு நேற்றுமுன்தினம் வவுனியாவில் ஏற்பாடு செய்திருந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்குகொண்ட மாணவியரை முதல் இரண்டு படங்களிலும், அதில் பங்குபற்றிய பிரமுகர்களில் ஒருபகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். (ஒ)

# அமெரிக்கா - இலங்கை இடையே வர்த்தகத்தை மேம்படுத்த திட்டம்

## விரைவில் உடன்பாடு கைச்சாத்து

கொழும்பு,ஜுலை25

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இருதரப்பு வர்த்தகத் தொடர்புகளை வலுவாக்குவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் பல விசேட நடவடிக்கைகளை தாம் மேற கொள்ளவுள்ளதாக அமெரிக்க வர்த்தக அமைச்சரவைப் பிரதிநிதி றோபேட் சொலிக் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய அரசின் பொருளாதார மற்றும் சமாதான நடவடிக்கைகள், அவை தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் அர்ப்பணிப்புகள் மற்றும் முயற்சிகள் ஆகியன குறித்து திருப்தி தெரிவித்துள்ள றோபேட் சொலிக் இவை தொடர்பாக அமெரிக்க அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் தலைமையில் சென்ற இலங்கைக் குழுவினரைச் சந்தித்தவேளையிலேயே றோபேட் சொலிக் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் அமெரிக்காவும் இடையே வர்த்தகம் மற்றும் முதலீடுகள் ஆகியன தொடர்பாக அனுசரிக்கப்படவேண்டிய ஒழுங்குகள் குறித்து இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டது. இந்த நோக்குடன் வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் திட்டங்கள் குறித்த 'ரிபா' (TIFA) உடன்பாடு இருநாடுகளுக்கும் இடையே விரைவில் கைச்சாத்திடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னர் இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் மேலும் அபிவிருத்தியடைய அதிக வாய்ப்புக்கள் உருவாகும்.

மிகவிரைவில் தென்னாசியப் பிராந்தியம் தொடர்பாகத் தனியான வர்த்தகப் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிவித்த றோபேட் சொலிக் அதன்பின்னர் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகத் தொடர்புகள் வலுவடையும் எனத் தெரிவித்துள்ளார்.

மிகவும் மோசமான நிலையில் இருந்த இலங்கையின் பொருளாதாரத்தைச் சீர்செய்வதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை தான் தொடர்ந்து அவதானித்து வருவதாகவும் - தான் அவை குறித்து நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் -

றோபெட் சொலித் தெரிவித்தார்

இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் உல்லாசப் பயணத் துறையை மேம்படுத்துவது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட, பிரதமரின் செயலர் பிராட்மன் வீரக்கோன் மேலதிகச் செயலர் சமன் அத்தாவுடஹெட்டி மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரக வர்த்தகப் பிரிவு அதிகாரி சமன் உடகெதற ஆகியோர் இச்சந்திப்பில் பங்குபற்றினர். (ஒ)

## தாய்ப்பால் மகத்துவ தினம்

சண்டிலிப்பாய்,ஜுலை25

தேசிய தாய்ப்பால் மகத்துவ தினம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தாய்ப்பாலின் மகத்துவம் மற்றும் முக்கியத்துவம் தொடர்பான கருத்தரங்குகள் மற்றும் பிரசார நடவடிக்கைகளை சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இததினத்தை முன்னிட்டு மேற்கொள்ளும்படி யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார். (ஒ-135)

## வைகோவை விடுவிக்கக் கோரி

# லண்டனில் ஈழத் தமிழர்கள் வெள்ளியன்று ஆர்ப்பாட்டம்!

ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோவை விடுவிக்கக்கோரி நாளை வெள்ளிக்கிழமை லண்டனிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு முன்னால் ஈழத தமிழர்கள் ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளனர்.

'ஈழத் தமிழரின் இன்னல் துடைத்திட - உயர்ந்த கரங்களுக்கு உரமேற்ற - மனந்திறந்து குரல் கொடுக்க - வெள்ளியன்று நண்பகல் 12 மணியளவில் இந்தியத் தூதரகத்துக்கு முன்னால் கூடுவீர்' என்று ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்திருக்கிறார்கள். எமக்காகக் குரல் கொடுத்த வைகோவை விடுவிக்கக் கோருவது எமது தார்மீகக் கடமை. மௌனமாக [illegible] மனித உரிமைக்கு - [illegible] பேச்சுரிமைக்கு - வலுவூட்டு[illegible] - என்று ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# தேசிய மெய்வன்மைப் போட்டிகள் கொழும்பில் இன்று ஆரம்பம்

"80 ஆவது தேசிய மெய்வன்மைப் போட்டிகள் இன்று முதல் ஜுலை 28ஆம் திகதிவரை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. இப்போட்டிகள் ஓகஸ்ட் 9-12 வரை கொழும்பில் நடைபெறவுள்ள ஆசிய மெய்வன்மைப் போட்டிகளுக்கான ஒத்திகையாகவும் அமையவுள்ளன.

- இவ்வாறு இலங்கை மெய்வன்மைச் சங்கத் தலைவர் சுனில் ஜயவீர ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

"1920 இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை மெய்வல்லுநர் சங்கம் இலங்கையில் மிகவும் பழைமை வாய்ந்த தேசிய விளையாட்டுச் சங்கமாகவுள்ளது. உலகின் மெய்வல்லுநர் சங்கங்களின் 8 ஆவது பழைமையான சங்கம் இது.

"இம்முறை தேசிய மெய்வன்மைப் போட்டிகளில் 536 ஆண்களும், 276 பெண்களும் பங்குபற்றுகின்றனர். முன்னெப்போதையும் விட பெருந்தொகையான போட்டியாளர்கள் இம்முறை பங்குபற்றுகின்றனர்.

"இம்முறை வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்தும் 29 ஆண்களும், 16 பெண்களும் பங்குபற்றுகின்றனர். இவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 8ஆண்களும் 3 பெண்களும் அடங்குவர்.

"சுகததாஸ விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ள நவீன ஓடுதளத்தில் நடைபெறும் முதலாவது சுற்றுப் போட்டியாக இது விளங்கவுள்ளது.

"இந்த ஓட்டப்பாதையில், போட்டியாளர்களுக்கான சுவட்டு ஒழுங்குகளைக் குறிக்கும் வேலைகள் தற்போது நடைபெறுகின்றன.

இதற்கு நான்கு நாள்களாவது தேவைப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும், எமது வற்புறுத்தலின் காரணமாக இரவு பகலாக பணிகள் நடைபெறுகின்றன.

- இவ்வாறு சுனில் ஜயவீர மேலும் கூறினார். (ஐ)

# மாதகல்-பெரியவிளான் வீதியை புனரமைக்கும்படி கோரிக்கை!

சண்டிலிப்பாய்,ஜுலை25

கடந்த 12 வருடகாலமாக மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் மூடப்பட்டுள்ள மாதகல் - பெரியவிளான் புனித அந்தோனியார் வீதியை புனரமைப்புச் செய்து மக்கள் போக்குவரத்திற்குத் திறந்துவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று மாதகல் பகுதி மக்கள் வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவரிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதிக்கு மிகவும் சமீபமாக முன்னர் பாதுகாப்பு படையினர் போட்ட மண் அணை பெரியவிளான் வரை இருப்பதாகவும் -

இப்பகுதியில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் -

இவ்வீதி தற்போது பலத்த சேதமடைந்து பற்றைகள் மண்டி, செடிகள் வளர்ந்து, மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் இருப்பதாகவும் -

மேற்படி மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயக் காணிகளும், நெல் வயல்களும் இப்பகுதியில் இருப்பதால் விவசாயிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், ஆகவே, இவ்வீதியைத் திருத்துவதற்கு ஆவன செய்யுமாறும் அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாதகலிலிருந்து பெரியவிளான், இளவாலை போன்ற இடங்களுக்குச் செல்லும் மக்கள் பண்டத்தரிப்பு சந்தி ஊடாகத் தற்போது போக்குவரத்தை மேற்கொண்டுள்ளமை மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-135)



# சாயி சிந்தனை

## கல்வியின் நோக்கம்

சமுதாயத்திற்குச் சேவை செய்யாமல் பணம் சம்பாதிக்க மட்டுமே, கல்வி பயன்படுத்தப்படுமானால் அது மிகவும் வெட்கரமானது? இன்று மனிதர்கள் நேர்மையற்ற முறையில் பணம் சம்பாதிக்கிறார்கள். பூமி சூரியனைச் சுற்றுவதுபோல் மனிதன் பணத்தின் பின்னால் சுற்றுகிறான். இதுவா மனித வாழ்க்கையின் குறிக்கோள்? இல்லை. பணம் முக்கியமில்லை. "Money comes and goes but morality comes and grows"

ஆகவே, நேர்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். சமுதாயத்திற்கு உதவக் கல்வியைப் பயன்படுத்துங்கள். இந்த உலகிற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குங்கள். இக்கல்வியும் சமுதாயத்திலிருந்துதான் உங்களுக்குக் கிடைத்தது. அதனைத் திரும்பவும் அச்சமுதாயத்துக்குப் பயன்படுவிதமாக உபயோகப் படுத்துங்கள்.

இறைவன் கொடுத்த இதயத்தை அவருக்கே திருப்பியளிக்க வேண்டும். நீங்கள் எதையும் தூய அன்புடன் கொடுத்தால் இறைவன் அதனை நிச்சயமாக ஏற்றுக்கொள்வார். நீங்கள் எத்தனையோ புனித நூல்களையும், பல ஸ்லோகங்களையும் படிக்கிறீர்கள். உங்களால் சோகத்தை விட்டொழிக்க முடியவில்லை. துயரத்தை விட்டொழிக்க ஒரே வழி, உங்களை இறைவனிடம் சமர்ப்பித்து விடுவதுதான்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

# காரைநகருக்குத் தனியாக பிரதேச செயலகம் வேண்டும்

## யாழ்.பல்கலை துணைவேந்தர் வலியுறுத்து

காரைநகர்,ஜுலை25

காரைநகர் மக்களின் சிரமங்கள் அகல காரைநகருக்கெனத் தனியான பிரதேச செயலகம் உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினர் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை. காரைநகர் இந்துக்கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற "காரைநகர் தொன்மையும் வன்மையும்" என்ற நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

துணைவேந்தர் தொடர்ந்து பேசுகையில்:-

"காரைநகர் பகுதியானது இரு தலைக் கொள்ளி எறும்புபோல் உள்ளது. இதன் தேர்தல் தொகுதியானது வட்டுக்கோட்டையுடனும், பிரதேச செயலகம் ஊர்காவற்றுறையுடனும் இணைந்துள்ளது.

"இதனால் இங்குள்ள மக்கள் பெரும சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். எனவே, காரைநகருக்குத் தனியான பிரதேச செயலகம் உருவாக்கப்பட வேண்டும்.

"தீவுப்பகுதி மக்களில் பெரும்பாலானவர்கள் யாழ்நகரப்பகுதியை அண்டி வசித்து வந்தாலும், பிறந்த மண்ணை வளப்படுத்த வேண்டும் என்ற மூச்சுடனே வாழ்கின்றனர். நகர்ப்புற வாழ்வும், ஊர்ப்பற்றும் முரண்படாதவாறு பிரதேச மக்களின் சமூகக் கட்டமைப்புகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

"தீவுப்பகுதி மக்களின் தனித்துவம பேணப்படுவதற்கு காரணம் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் உள்ளூர்த் திருமண உறவினைப் பேணிவருவதாகும். இதில் காரைநகர் மக்கள் முன்னணியில் நிற்கின்றார்கள். இவர்கள் ஊக்கமும் விடாமுயற்சியும் மிக்கவர்கள். இதனால்தான் பல்வேறு துறைகளிலும் முன்னணியில் திகழ்கிறார்கள்.

"சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களினால் தமிழ மக்கள் பயனடையவில்லை. எதிர்காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தமிழ்மக்களுக்கு சாதகமாக அமையவேண்டும்.

"காரைநகர் கோவளம் கடற்கரையில் மிகப்பெரிய தங்கும் விடுதி ஒன்று அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், இப்பிரதேச மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்குமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

"1995 இன் பின் குடாநாட்டில் மீள கட்டுமானம் பணிக்காகக் கூடுதல் முதவிட்டும் குறைந்த பலன் பெற்ற பகுதியாகத் தீவகம் காணப்படுகின்றது.

"வெளிநாடுகளில் படையினரின் தளங்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் அப்பிரதேச மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். ஆனால், எமது பகுதிகளில் அத்தகைய நிலை இல்லை. எதிர்காலத்தில் படைமுகாம்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் எமது மக்கள் வேலைவாய்ப்பு பெறும நிலை வந்தால் மகிழ்ச்சிக்குரியதே" - என்றார்.

காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை வரவேற்புரை நிகழ்த்துகையில்:-

"காரைநகர் மக்கள் இறைபக்தி மிகுந்தவர்கள் என்பதற்கு இங்கு அமைந்துள்ள 54 இந்து ஆலயங்கள் சான்றாக அமைகின்றன.

"யாழ். வரும் சுற்றுலாப் பயணிகள் காரைநகர் வரத்தவறுவதில்லை. அத்தனை சிறப்புமிக்கது காரைநகர். இங்கு அமைந்துள்ள ஈழத்துச் சிதம்பரமும் கடற்கரையும் இதற்கு அணி சேர்க்கின்றன" - என்றார்.

மேற்படி நூல் வெளியீட்டு நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக வருகை விரிவுரையாளர் பேராசிரியர் வி.சிவசாமி நூலை வெளியிட்டார். நூலின் முதற் பிரதியை தொழில் அதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் பெற்றுக்கொண்டார். ஆய்வுரையை கலாநிதி க. குணராசா நிகழ்த்தினார். நூலாசிரியரும் கொழும்பு கம்பன் கழகப் பொருளாளருமான ச.அ.பாலேந்திரன் நன்றி தெரிவித்து உரையாற்றினார். (ஒ-73)

# வங்கிப் பாதுகாப்பு ஊழியர்களை கட்டிவைத்த பின்னர் கொள்ளை

கொழும்பு,ஜூலை25

பட்டப்பகலில் மக்கள் வங்கியின் பாதுகாப்பு ஊழியர்களைக் கட்டி வைத்து, பல லட்ச ரூபா கொள்ளை யிடப்பட்ட சம்பவமொன்று கடந்த திங்கட்கிழமை வியாங்கொடைப் பிர தேசத்தில் அமைந்துள்ள நயிவல என்ற இடத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் இடம்பெற்றுள்ளது.

ஆயுதம் தரித்த கோஷ்டியொன்று உட்புகுந்து பாதுகாப்பு ஊழியர் களைத் தாக்கிய பின் அவர்களைக் கட்டி வைத்துவிட்டு, கொள்ளையை மேற்கொண்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்பும் இதே வங்கியில் இதேபாணியில் கொள் ளைச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

வாகனம் ஒன்றில் வந்த நான்கு நபர்களே இத்துணிகரக் கொள்ளை யில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை எவரும் கைதுசெய் யப்படவில்லை என வியாங்கொடை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஒ)

# மாணவர்கள் - ஆசிரியர்கள் மாத்தளையில் மோதல்!

மாத்தளையிலுள்ள பிரபல பாட சாலை ஒன்றில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் கடந்த திங்கள் ஏற்பட்ட மோதலில் 8 மாண வர்கள் காயமடைந்தனர். பாடசாலை காலவரையறையின்றி இழுத்து மூடப்பட்டுள்ளது. காயமடைந்தவர் களில் இருமாணவர்கள் பலத்த அடிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் மாத்தளை மாவட்ட ஆஸ்பத திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரி வித்து பாடசாலையின் உயர்வகுப்பு மாணவர்கள் பாடசாலைக்கு வெளி யில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வகுப்பு களைப் பகிஷ்கரித்தனர். (ஒ)

## மத்துரட்ட சம்பவம்

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரின் அடிப்படை உரிமைமீறல் மனு தள்ளுபடி!

மத்துரட்ட பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் தாங்கள் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டமை தமது அடிப்படை உரிமைகளை மீறிய செயல் எனத் தெரிவித்து ஜனாதி பதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஜவரால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை உயர்நீதிமன்றம் திங்களன்று நிரா கரித்தது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ஷிராணி பண்டார நாயக்க, பீளதுசூரிய ஆகியோர் உரிய காலத்துக்குள் இந்த மனு தாக்கல் செய்யப்படவில்லை எனத் தெரிவித்து மனுவை நிராகரித்தனர்.

சம்பவம் நடந்த தினமான 2001 டிசெம்பர் 3ஆம் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் அடிப்படை மனித உரிமைமீறல் மனு சமர்ப்பிக்கப்பட் டிருக்க வேண்டும். ஆனால், மே மாதம் 5ஆம் திகதியே அது நீதி மன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்பன நீதிமன்றம் கவனத்திற் கொண்டுள்ளது என நீதியரசர்கள் தெரிவித்தனர்.

டிசெம்பர் 2ஆம் திகதி தாம் கண் டியிலிருந்து கடமை நிமித்தம் நுவ ரெலியா நோக்கிச் சென்றதாகவும், ஜனாதிபதியின் விஜயமொன்று தொடர் பான உளவு நடவடிக்கைகளில் ஈடு படுவதற்காகச் செல்லும் வழியில் பொ.ஐ.மு. அமைப்பாளர் ஜயரட்ன திசாநாயக்கவின் வாகனத் தொடர ணியை தாங்கள் பின் தொடர வேண் டியதாயிற்று என்றும், பிற்பகல் 2.00 மணியளவில் பாதியப்பெல பாலத் திற்கருகே தாம் நிறுத்தப்பட்டதாக வும் மனுதாரர்கள் தெரிவித்தனர்.

பாலத்தின் மறுமுனையில் கல வரநிலைமை காணப்பட்டது. கூட்டம் ஒன்று எம்மை நோக்கி முன்னேறியது. கோப்ரல் திசேரா வானத்தை நோக்கி இருதடவைகள் சுட்டார். கூட்டம் கலைந்தது. நாம் பின்நோக்கி நகர்ந்த போது மத்துரட்ட பொலீஸ் பொறுப் பதிகாரி வந்து எமக்கு முன் ரிவோல் வரை நீட்டினார். சரணடையும்படி கட்டளையிட்டார். எம்மைக் கைது செய்து ஜீப்பில் ஏற்றிச்சென்றார். பின்னர் கண்டி நீதிவானின் உத்தர வின்படி விளக்கமறியலில் வைக்கப் பட்டு ஏப்ரல் 2ஆம் திகதி பிணை யில் செல்ல அனுமதிக்கப்பட்டோம்.

- இவ்வாறு மனுதாரர்கள் தமது மனுவில் மேலும் தெரிவித்திருந்த னர். (ஒ)

### எழுத்தாக்கப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை25

மாகாணமட்ட தமிழ்மொழித் தினப் போட்டியின் எழுத்தாக்கப் போட்டி களும் ஆங்கிலமொழித் தினப் போட் டியின் எழுத்தாக்கப் போட்டிகளும் எதிர்வரும் முதலாம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற வுள்ளதாக யாழ்.கல்வி வலய பிர திக் கல்விப் பணிப்பாளர் ந.வரத ராஜா தெரிவித்துள்ளார். (ஒ-10)

# யாவரும் விரும்பும் சமாதானத்தை ஏற்படுத்துவதே அரசின் நோக்கம்

## அமைச்சர் இம்தியாஸ் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை25

அரைநூற்றாண்டுக்கு முன்னர் எமது நாட்டுக்குச் சுதந்திரம் தர அந்நிய ஆட்சியாளர்கள் இலங்கை யர்களாகிய எமக்கு விடுத்த முதலா வது நிபந்தனை "இனவேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணையும்வரை இலங் கைக்குச் சுதந்திரம் வழங்க முடி யாது" என்பதே.

அக்காலத்தில் எமது நாட்டில் இருந்த சகல இனத்தவர்களும் இதனை நிறைவேற்றி, சகல குறுகிய வேறு பாடுகளையும் மறந்து, ஒரே நாட்டின் பிரஜைகளாக செயற்பட்டதன் பல னாகவே எமக்குச் சுதந்திரத்தை வென்றுகொள்ள முடிந்தது.

ஆனால், இனப்பிரச்சினைக்கு நாம் இன்று முகம்கொடுத்துள்ளமை அத் தகைய ஒரு நிலைமை இன்மையே ஆகும். சர்வதேச உலகமும், எமது சமூகத்தின் பெருமளவு மக்களும் விடுக்கும் ஒரே வேண்டுகோளானது நிரந்தரமாக யுத்தம் நிறுத்தப்படக் கூடிய மக்கள் விரும்பும் ஓர் இணக் கப்பாட்டுக்கு வரவேண்டும் என்பதே.

அத்தகைய தேசிய இணக்கப் பாட்டினுள் யாவரும் எதிர்பார்க்கும் சமாதானத்தை ஏற்படுத்துவதே பிரதமா ரனில் விக்கிரமசிங்க தலைமையி லான தற்போதைய அரசின் நோக்கம்.

இவ்வாறு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக் கார் தெரிவித்தார். கொழும்பு ஸாஹி ராக் கல்லூரியில் நடைபெற்ற மர்ஹூம் கலாநிதி ரீ.பி.ஜாயாவின் 42ஆவது சிரார்த்த தினவைபவத்தில் உரை யாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இலங்கையர் என்ற வகையில் இன்று நாம் செய்யவேண்டியது இந் தச் சகல பிரச்சினைகளையும் மறந்து சகலரும் ஒற்றுமையான முறையில் ஒரு மனதுடன் நடவடிக்கை எடுப் பதன்மூலம் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதாகும்.

அன்று அந்நிய ஆட்சியாளர்கள் எமது நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு தாமதம் ஏற் படுத்தியதற்கு அடிப்படைக் காரண மாகக் காண்பித்தது தேசிய ரீதியில் நம் மத்தியில் காணப்பட்ட பிரிவினை களையே.

இந்தப் பிரிவினைகளைத் தளர்த் திக்கொண்டு சகலரையும் ஒற்றுமைப் படுத்தும் தலைமையை ஏற்றவர்களில் முக்கியமான ஒரு தலைவராக கலா நிதி ரீ.பி.ஜாயாவைக் குறிப்பிட்டுக் காட்ட முடியும். இன்று நாம் எதிர் கொண்டுள்ள விடயமும் அத்தகைய ஒரு சவாலே. இனங்கள் என்ற வகை யில் அல்லது பிற விடயங்களை அடிப்படையாக்க் கொண்டு, நாம் பிரிந்து வேறுபட்டுப் போராடும்போது நாம் இன்று எதிர்கொண்டுள்ள தேசிய பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் கண்டு கொள்வது இயலாத காரிய மாகிறது.

கடந்த 20ஆண்டுகளுக்கும் மேற் பட்ட காலத்திற்குள் நாம் முகம் கொடுத்த யுத்தத்தினால் வெளிப்படை யானது இது ஒன்றே. 20 ஆண்டு யுத்தத்தினால் நிகழ்ந்தது சகலரும் தோல்வியடைந்ததே. உயிர் அழிவு, அங்கவீனமுற்றவர்கள் ஆயிரக்கணக் கில் சமூகத்தில் சேர்ந்தது, கோடிக் கணக்கில் வளங்கள் அழிந்தது இவையே இந்த யுத்தத்தால் நாம் அடைந்த பிரதிப் பலன்கள் ஆகும். இதற்குப் பதிலாக இனங்களாக எம் மால் இணங்கமுடிந்த ஏதாவது விடயம் சம்பந்தமாக இணக்கப்பாட்டுக்கு வந்து யுத்தத்துக்குப் பதிலாக பேச்சு மூலம் தீர்வுக்கு வருவது தற்கால சமூகத்தின் முதன்மையான தேவை யாக உள்ளது.

உலகின் பலம்வாய்ந்த நாடு கள் அங்கம் வகிக்கும் சர்வதேச உலகமும், பற்பல சமூக நிறுவனங் களும், எமது நாட்டின் பெரும்பான்மை மக்கள் கூட்டத்தினரும் ஒரே குரலில் வேண்டுவது இதுவே என்றார்.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், நாடாளு மன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோரும் இந்த விழா வில் சிறப்புரையாற்றினர். (ஒ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டியில்
யா/அத்தியார் இந்துக் கல்லூரி மாணவன்
செல்வன் தங்கராசா துஷேன்
1,500 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவானதைப் பாராட்டுவதோடு, அவர் மேலும் கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்கவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/அத்தியார் இந்துக் கல்லூரி,
நீர்வேலி.
(6351)

## திருமணப் பொன்விழா வாழ்த்து



திரு.திருமதி
றொமிலஸ் (நடேசு)~பிரகாசி
தம்பதியினர் இல்லறமாம் நல்லறத்தில் இனிதே இணைந்து இன்று (25.07.2002) வியாழக்கிழமை திருமணப் பொன்விழாக்காணும் இவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் மகிழ்ச்சிகரமாக இன்பமுடன் இல்லறத்தில் நீடூழி வாழ்க என இதயங்கள் வாழ்த்த.
"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"
என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவர் வாக்குப்படி அன்னை வேளாங்கண்ணி மாதாவின் அருளோடு நலமுடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்!

வாழ்த்துபவர்கள்:
சகோதர சகோதரிகள்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.
புலோலி தெற்கு,
சாரையடி.
(6350)

## நீங்காத நினைவலைகள்

18ஆம் ஆண்டு



தோற்றம் 03 - 07 - 1948
மறைவு 11 - 01 - 1984

அமரர்
தம்பிமுத்து துரைராசா
(பொலீஸ் சார்ஜன்ட் - இல.14291)

இரண்டாம் ஆண்டு



அல்வை மண்ணில் உதயம் 13 - 02 - 1981
இந்திய மண்ணில் மறைவு 15 - 08 - 2000

அமரர்
துரைராசா ராஜ்குமார்
(ராசுப்பழம்)

*அப்பா! உமது நினைவால் மதிகலங்கி*
*நிற்கும் வேளையில் இன்று உங்கள் மைந்தனையும்*
*அரவணைத்துக் கொண்டீரோ? – இன்று*
*தனிமரமாய் நானடையும் வேதனையை யாரறிவார்?*

உங்கள் ஆத்மசாந்திக்காக ஆலடிப்பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி மற்றும் உற்றார், உறவினர்கள்.
"பொன்முருகன் இல்லம்"
மனோகரா, அல்வாய்.
(6353)

# சர்ச்சையைக் கிளப்பியுள்ள ஜனாதிபதியின் கைப்பை!

**ஜனாதிபதியின் கைப்பை தொடர்பாக விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், இது தொடர்பாக 21-07-2002 திகதிய 'ராவய' வார இதழில் வெளியான செய்தியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்திற்கு வரும்போது எடுத்துவருவதாகக் கூறப்படும் ரகசியக் கைப்பை தொடர்பாக வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்கா ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனல் கக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

அமைச்சரவை அல்லது நாடாளுமன்றத்தின் ஒப்புதலின்றி 246.5 கோடி ரூபா செல்வில் புதிய வாகனங்கள எனக் கூறி பாவிக்கப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்தது தொடர்பாக அமைச்சரவையில் காரசாரமாக விவாதிக்கப்பட்ட வேளையிலேயே ஜனாதிபதி எடுத்து வரும் கைப்பை தொடர்பான பிரச்சினை எழுப்பப்பட்டது.

ஜனாதிபதி பயன்படுத்தும் ரகசியக் கைப்பை பற்றி பிரதமமந்திரியோ அல்லது வேறு அமைச்சர்களோ தெரிந்திருக்காத நிலையில் அமைச்சர் ரவி கருணாநாயக்கா ஜனாதிபதியின் கையில் இருந்த கைப்பை குறித்துக் கேள்வி எழுப்பியது பிரதமருக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும் அவ்வளவு திருப்தியை ஏற்படுத்தவில்லை. இருப்பினும் அந்த கைப்பைய பிரச்சினை ஜனாதிபதிக்கு சினத்தை ஏற்படுத்தியது. முடிவில் ஜனாதிபதி அந்தக் கைப்பையுடன் குழப்பத்துடன் தான் வந்த காரணத்தையும் மறந்து எழுந்தார். அந்த ரகசிய கைப்பை குறித்த விடயங்களை பிரதமர் உட்பட ஏனையோர் அதன் பின்னரே அறிந்தனர்.

இந்தப் புதுமையான கைப்பையின் பெறுமதி 89 லட்ச ரூபாவாகும். இந்தக் கைப்பை இங்கிலாந்திலுள்ள 'டெக்னிக்கல் செர்வலன்ஸ்' (Technical Surverlance Ltd.) நிறுவனத்தில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேலெழுந்த பார்வைக்கு சாதாரண கைப்பை போல் தோன்றினாலும் அதில் வேறு எவரும் அறிந்துகொள்ள முடியாத விதத்தில் ஒலியையும் ஒளியையும் பதிவு செய்யக்கூடியதும், செல்வந்தநாடுகளில் புலனாய்வு அதிகாரிகளால் பயன்படுத்தப்படுவதுமான 'டிஜிடல்' ரகத்தைச் சேர்ந்த அதி நவீன கருவி பொருத்தப்பட்டுள்ளது.

'ஸ்ராயோ' ஒலியைப் பதிவு செய்வதற்காக ஆற்றல்மிகு ஒலிவாங்கியையும் 'வி.எச்.09' ரக ஒளிப்பதிவுக் கருவியையும் அந்தக் கைப்பை கொண்டிருந்தது.

இந்தப் படம் பிடிக்கும் கருவியைக் கொள்வனவு செய்வது தொடர்பாகப் புலனாய்வுப் பிரிவின் மேலதிகப் பணிப்பாளர் ரி.வி.சுமனசேகராவால் 'ரெக்னிக்கல் செர்வேலன்ஸ்' நிறுவனத்திற்குக் கட்டளை ஒன்று அனுப்பி

## அதன் விலை 89 லட்சமாம்; உள்ள நவீன சாதனங்களாம்

வைக்கப்பட்டுள்ளது. (அந்தக் கடிதம் பெட்டிச் செய்தியில்)

இந்தக் கடிதத்திலுள்ள தகவல்களின்படி இதற்கு முன்னரும் இத்தகைய ரகசியக் கைப்பை ஜனாதிபதியால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

எனவே, இந்த உபகரணங்கள் பொருத்தப்பட்ட கைப்பைகள் இரண்டு கொள்வனவு செய்ய 178 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

வெளிவரும் தகவல்களின்படி இந்தக் கைப்பைகளைக் கொள்வனவு செய்த நிறுவனத்திடமிருந்து மற்றுமொரு அதிஉயர் தொழில்நுட்பத்

**தமிழில்:கஜனி**

துடன் கூடிய புகைப்படக்கருவியும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் தாக்குதல்களும் இந்த அதிஉயர் தொழில்நுட்ப வசதி கொண்ட கருவியால் படமாக்கப்பட்டன எனவும் -




தாக்குதலின் பின்னர் பிரபலங்கள் அந்தக் காட்சிகளை ஆற அமர இருந்து பார்த்து ரசித்தனர் எனவும் - இதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் தகவல்கள் வெளிவந்தன.



*கைப்பையின் தொழில்நுட்பத் தரவுகள்*

உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகளின்படி அமைச்சரவைக் கூட்ட நடவடிக்கைகளை ரகசியமாக ஒலிப்பதிவு செய்வது மிகவும் பாரதூரமான ராஜதுரோகக் குற்றம் எனக் கருதப்படுகிறது. ✪



அன்புடையீர்,

'வி.எச்.09' வீடியோ வர்ண கமெராவுடன்கூடிய பெண்களுக்கான கைப்பை 01 வழங்குவது தொடர்பான கேள்விக்கூறு

தங்களால் அனுப்பிவைக்கப்பட்ட 9.10.2001 திகதிய கேள்விக்கூறு தொடர்பாக இரவு நேரங்களில் ஓரளவு வெளிச்சத்திலும் உயர்ரகப் படங்களை எடுக்கக்கூடிய DCR-PC.9 ரகத்தைச் சேர்ந்த (சோனி ரகம்) ஒலி, ஒளிப்பதிவு உபகரணங்கள் பொருத்தப்பட்ட VH.09 வீடியோ கைப்பை ஒன்றை வழங்குவது தொடர்பான கட்டளையை அனுப்பவிரும்புகிறோம். இதற்கு முன்னர் வழங்கிய அதே ரகத்தைச் சேர்ந்த கறுப்பு நிற கைப்பையிலேயே இந்த உபகரணங்கள் பொருத்தப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட உபகரணங்களை லண்டனில் 'W 2, 2LU இல.13 ஹயிட் பாக் கார்டின்ஸ்' என்ற விலாசத்தில் அமைந்துள்ள சிறிலங்கா தூதரகத்தைச் சேர்ந்த சுனில் முனசிங்காவிடம் வழங்குமாறு தயவுசெய்து தங்கள் முகவருக்குத் தெரிவிக்கவும். இந்த உபகரணத்தைக் கையேற்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் சுனில் முனசிங்காவுக்கு வழங்கப்படும்.

இந்த உபகரணம் தொடர்பான கொடுப்பனவுகள் என்னால் கொழும்பில் வழங்கப்படும்.

ஒபபம்: ரீ.வி.சுமனசேகரா
உள்நாட்டு புலனாய்வு பணிப்பாளர்,
சபையின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம்.
13.11.2001

## அரச ஊழியர்க்கு கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூலை25

வடக்கு - கிழக்கு முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அரச ஊழியருக்கான தொலைக் கல்வித் திட்டத்தின் கீழ் ஒருநாள் கணனிப் பயிற்சி இன்று இடம் பெறுகிறது.

இந்தப் பயிற்சித் திட்டத்தில் யாழ். பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன், கோப்பாய் பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் என்.வேதநாயகன், உடுவில் பிரதேச செயலக கணக்காய்வாளர் என்.இராசநாயகம், யாழ்பிரதேச செயலகக் கணக்காய்வாளர் ஜெ.என்.குணம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எம்.பாலசிங்கம், நிர்வாக அலுவலர் எஸ்.செல்வராஜா, யாழ்.மாநகரசபை கணக்காய்வுப் பரிசோதகர் எஸ்.செல்வராஜா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சின்னத்துரை ஆகியோர் கலந்துகொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.கோவில் வீதியில் உள்ள 'கட்பாஸ்' நிலையத்தில் இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது. (ஒ)

## வாராந்த வெள்ளி நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை25

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் நாளை ஞானச்சுடர் ஆடி மாத வெளியீடு இடம்பெறவுள்ளது. மலருக்குரிய மதிப்புரையை சைவப் புலவர் கந்த சத்தியதாசனும் வெளியீட்டுரையை சமாதான நீதிவான் சிவத்மநாதன் அவர்களும் நிகழ்த்த உள்ளார்கள்

## யாழ். இந்துவில் விஞ்ஞான தினம்

யாழ்ப்பாணம்,ஜூலை25

யாழ்.இந்துக் கல்லூரி விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான தினவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் க.சண்முகசுந்தரம் கலந்து கொள்கிறார். இதில் 'இந்து விஞ்ஞானி' மலர் வெளியீடும் இடம்பெறும். (ஒ-9)

# ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்றச்சாட்டு கொண்டுவர முஸ்தீபு

ஜனாதிபதிமீதும், பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாமீதும் அரசியற் குற்றச்சாட்டுப் பிரேரணைகள் கொண்டுவரப்படும் முயற்சிகள் மீண்டும் தலைதூக்கியுள்ளன.

முன்னரும் இவ்விவகாரம் முழுமூச்சாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. பின்னர் ஏனோ ஓய்ந்து விட்டிருந்தது. நாடாளுமன்றத்தில் போதிய பெரும்பான்மை இன்மையால் முயற்சிகள் கைவிடப்பட்டிருக்கலாம்.

கைவிடப்பட்டதைத் தொடர்ந்து, ஜனாதிபதியும் பிரதமரும் உடன்பாடான ஒரு போக்கை ஏற்படுத்தும் சமரச முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தன.

கூட்டுத்தலைமையின்கீழ் ஒரு குழுவாகச் செயற்படுவது பற்றிய ஜனாபதியின் ஆலோசனைகள் மற்றும் ஐ.தே.க.தவிசாளர் மலிக் சமரவிக்கிரம மூலமான சமரசப் பேச்சுக்கள் என்பன நடைபெற்றன.

மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டிய சட்டமூலங்களைக் கையில் வைத்துக்கொண்டு காத்திருக்கிறது அரசாங்கம். நிறைவேற்று அதிகாரங்களை வைத்துக்கொண்டு 'வீட்டோ' செய்யத் தயாராயிருக்கிறார் ஜனாதிபதி.

இருபகுதியினருக்கும் இடையே அதிகாரப் பிரச்சினை இருப்பதாக கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார். இதனால்தான் பேச்சுக்கள் மந்த நிலையடைவதாகவும் கூறிய அவர், ஜனாதிபதி அமைதி முயற்சிகளுக்கு இடையூறாக இருக்கிறார். ரணில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருந்தாலும் இறுதி முடிவை எடுக்க முடியாமல் இருக்கிறார் என்று தெரிவித்திருந்தார்.

இருவரும் பதவிகளில் இருந்து கொண்டு விட்டுக்கொடாமல்போனால் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனவும் அவர் கூறிவிட்டார்.

### ஊழல் குற்றச்சாட்டு

இந்த நிலையில்தான் மீண்டும் அரசியற் குற்றச்சாட்டு பிரேரணை முன்வைக்கப்படுகிறது. இம்முறை ஜனாதிபதிமீது ஊழல் குற்றச்சாட்டு முன்வைக்கப்படவிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

பாரதூரமான இரண்டு நிதிமோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவுள்ளன. அதாவது கடந்த அரசாங்க காலத்தில் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி திறைசேரியிலிருந்து பணம் பெற்று 48 ஆடம்பரக் கார்களை ஜனாதிபதி கொள்வனவு செய்திருக்கிறார்.

**கலைவாணன்**

மக்கள் பணம் உரிய அங்கீகாரமின்றி செலவு செய்யப்பட்டிருப்பது ஒருபுறமிருக்க, புதிய வாகனங்கள் எனக்கூறி ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட பழைய வாகனங்களே இறக்குமதி செய்யப்பட்டன.

ஹொங்கொங்கிலுள்ள ஆர்.ஆர்.என்.தரகர் நிறுவனம் மூலமாக அந்தக் கார்கள் நவீன தோற்றம் கொடுக்கப்பட்டு இறக்கப்பட்டன.

அத்துடன் இதில் நடந்திருக்கக் கூடிய முறைகேடுகளை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவுக்கு குறிப்பிட்ட வாகனங்களின் பதிவு இலக்கங்களை வழங்கத் தவறியமை முதலாவது முக்கிய குற்றச்சாட்டு.

அடுத்ததாக, றப்பர் உற்பத்தி ஏற்றுமதி கூட்டுத்தாபனத்திற்கு சேர்தல் அண்மித்த சமயம் திறைசேரியிலிருந்து 900 மில்லியன் ரூபாவை அவசரமாக விடுவித்தமை, அதில் 541 மில்லியன் ரூபா மோசடி நடந்திருக்கிறது.

அத்துடன் அத்திபாரக்கல் நாட்டு விழாவொன்றிற்கு 120 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருக்கிறது.

இவையாவும் ஜனாதிபதியின் உத்தரவில் நடைபெற்றுள்ளன. இதனால், இந்த இரு குற்றச்சாட்டுக்களின் மீதும் ஜனாதிபதிக்கெதிராக அரசியற் குற்றச்சாட்டு கொண்டுவரப்படவுள்ளன.

ஜூலை மாதம் 4ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ.தே.கவின் அரசியல் விவகாரக் குழு இத்தீர்மானத்தை எடுத்த வேளையில், பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாமீதும் இவ்வாறான பிரேரணை கொண்டுவருவதென்று தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கெதிரான அரசியற் குற்றச்சாட்டுப் பிரேரணை உச்சநீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருக்குமென்பதால் அங்கு ஏற்படக் கூடிய தடங்கல்களிலிருந்து பிரேரணையைக் காப்பாற்றும் பொருட்டே பிரதம நீதியரசர் மீது குற்றவழுவுரைப் பிரேரணை கொண்டுவரப்படவேண்டும் என அமைச்சர்கள் முடிவுசெய்தனர்.

### வலுவான முரண்பாடுகள்

ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்திற்குமிடையே முரண்பாடுகள் வலுவடைந்து வருகின்றன.

எப்பொழுதுமே எதிர்பார்க்கப்பட்டு வந்ததுபோல், ஜனாதிபதி நாடாளுமன்றத்தை டிசெம்பர் 5ஆம் திகதியுடன கலைத்துவிடக்கூடும் என்ற நிலையில் அதனைத் தடுத்துவைக்கும் முயற்சியே இந்த அரசியற்குற்றச்சாட்டுப் பிரேரணையா?

அதாவது ஒரு ஜனாதிபதி தனக்கெதிராக நாடாளுமன்றம் அரசியற் குற்றச்சாட்டுப் பிரேரணையைச் சமர்ப்பித்திருக்கும்போது அதுபற்றி வாக்கெடுப்பு நடத்தப்படும்வரை அந்த நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

எனவே, இந்த சட்ட நுணுக்கத்திற்குள் புகுந்து, ஒரு சிறுகாலப் பகுதிக்கு உயிர்வாழ நாடாளுமன்றம் முயற்சிப்பதாகவும் இருக்கலாம்.

## அதிகாரப் பலப்பரீட்சையின் உச்சக்கட்டம்

எவ்வாறாயினும், ஜனாதிபதிக்கெதிராக ஐதேமு. கொண்டுவரவிருக்கும் குற்றச்சாட்டின் முதுகெலும்பை ஒடிக்கும் விதத்தில் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை விளக்கியுள்ளார்.

புதன்கிழமை ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியாகிய அறிக்கையில் அவர் காத்திரமான உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அமைச்சரவையின் இரு அமைச்சர்களான ரவி கருணாநாயக்கவும், கே.என்.சொக்ஸியும் அதிமுக்கியமும், இரகசியத்தன்மையும் வாய்ந்த அமைச்சரவை இரகசியங்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி எனது உயிருக்கு ஆபத்து உண்டுபண்ண முனைகிறார்கள்.

ஆரம்பத்தில் 38 வாகனங்களென்றும், பின்னர் 44 வாகனங்கள் என்றும் இறுதியில் ஜூலை முதலாம் திகதியன்று 48 வாகனங்களென்றும் தெளிவின்றிப் பேசினார்கள்.

திரிக்கப்பட்ட உண்மைகளை ஊடகங்களுக்கு கூறி நானோ, எனது அலுவலகமோ ஊழலில் ஈடுபட்டதாகவும், ஒன்றில் நான் இந்த வாகனங்களைத் திருடிவிட்டதாகவோ அல்லது இறக்குமதி செய்யாத வாகனங்களுக்குக் கொடுப்பனவு செய்வதாகக் கூறி பணத்தை மோசடி செய்துவிட்டேன் என்று காட்டுவதற்கு முயற்சித்தனர்.

இந்த வாகனங்கள் பற்றிய விவரங்களைத் தேடும் தேவை எப்படி ஏற்பட்டது என்பது நான் இன்னும் அறியாததாகவே உள்ளது. இந்த விசித்திரமான விசாரணையின் பின்னணியில் தர்க்க ரீதியாக உள்ளது ஒரு விடயம் மட்டுமே என்பது எனக்குப் புரிகிறது. எனது பிரயாணம் சம்பந்தமான விவரங்களைப் பெறவிரும்பும் எவருக்கோ அல்லது புலிகளுக்கோ அவற்றைத்

(10ஆம் பக்கம் பார்க்க)

# மொழியைத் தாயாக உருவகப்படுத்தி உயர்த்திப் போற்றுபவர்கள் தமிழர்கள்!

## மாத்தளை உதவிக் கல்விப் பணிப்பாளர் கருத்து

'மொழி என்பது கருத்துப் பரிமாற்றத்துக்கான ஓர் ஊடகம் மாத்திரமே என்று கருதப்பட்டாலும்கூட தமிழ்மொழியைப் பொறுத்தவரை அதைப் பேசும் மக்களின் உயிராகவும், உயர்வாகவுமே உயர் நிலையில் வைத்துக் கருதப்படுகிறது. மொழியைத் தாயாக உருவகப்படுததி உயிருக்கே ஒப்பானதாக மதித்துப் போற்றும் பண்பு தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கே உரிய ஒரு தனிப்பண்பு.

இவ்வாறு மாத்தளை உதவிக் கல்விப் பணிப்பாளரும் தமிழ்மொழித் தின ஏற்பாட்டுக்குழுவின் தலைவரும் கவிஞருமான என்.அருளானந்தம் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் மாத்தளை இந்து தேசிய கல்லூரியில் நடைபெற்ற தமிழ்மொழித் தின நிகழ்வுகளின் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தமிழ்மொழி ஆர்வலர்கள், சமூக நலன்விரும்பிகள், புரவலர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும கூடியிருந்த வைபவத்தின்போது அவர் தொடர்ந்து பேசியபோது;

'தாய் மொழிக்காகவும், அதன் மேம்பாட்டுக்காகவும் பாடுபடும் தமிழர்கள் என்றாவது ஒரு சந்தர்ப்பத்தில் அம்மொழிக்கு எந்தவிதத்திலும் ஒரு இழிவோ அல்லது பாதிப்போ ஏற்படும்போது தமது உயிர், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்யக்கூடியவர்கள். அப்படிச் செய்ய முன்வரும் பண்புள்ளவர்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மத்தியிலேயே இருக்கின்றனர். இத்தகைய ஓர் உயர்ந்த கௌரவத்தை வேறு எந்த மொழி பேசுவோர் மத்தியிலும் காண்பது அரிது.

மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களுக்குத் தாய்மொழிப் பற்று எந்தளவுக்கு இருக்க வேண்டுமோ அதைவிட ஒருபடி மேலே அம்மொழியைக் கற்றுத்தேறவேண்டும் என்பதில் ஆர்வம் முக்கியம். தாய் மொழியில் அதுவும் தமிழ்மொழியில் பெறுகின்ற ஆற்றலோ ஒரு தனிக் கௌரவத்தை ஈட்டித்தரும். தாய் மொழியில் பெறுகின்ற திறமை ஏனைய எல்லாப்பாடங்களையுமே சிரமமின்றிக் கற்றுத் தெளிவடைய வழிவகுக்கும்.

சாதாரண தரம், உயர்தரம் கற்கும் மாணவர்கள்கூட இன்று தமிழைப் பிழையாக எழுதுவதைக் காண முடிகின்றது. ஏனைய பாடங்களில் காட்டும் ஆர்வத்தைத் தமிழ கற்பதில் காட்டாமையே இதற்குக் காரணமாகும். விஷய அறிவுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் ஏனைய பாடங்களில் சித்திபெறும் மாணவர்கள் தமிழ்மொழியில் சித்திபெறத் தவறிவிடுகின்றனர்.

இவ்விடயத்தில் ஆசிரியர்களின் பங்களிப்பு மாத்திரமன்றி பெற்றோரின் ஊக்குவிப்பும் அத்தியவசியமாகும். கணிதம், ஆங்கிலம், கணணி போன்ற பாடங்களில் காட்டப்படும் முக்கியத்துவத்தை தமிழ்மொழியைக கற்பதிலும் காட்டப்படவேண்டும். இத்தகைய மாற்றம் ஏற்பட்டால் இன்றைய மாணவர்கள் கல்வித்துறையில் சிறபபாகப் பிரகாசிக்க முடியும்'

எனக் குறிப்பிட்டார். (ஓ)

# பூரண சமாதானத்தையே பிரபாகரன் விரும்புகிறார்

## அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா கருத்து

காத்தான்குடி,ஜூலை25

"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நல்லதொரு மனிதர். அவரும் இந்த நாட்டிலே பூரண சமாதானத்தையே விரும்புகின்றார். யுத்தத்தில் நாம் சாதித்ததெல்லாம் பெறுமதிமிக்க இளைஞர் பரம்பரையை இழந்ததுதான். அரசோ, புலிகளோ யுத்தத்தில் வெல்ல முடியாது. புலிகளானாலும், இராணுவத்தினரானாலும் அவர்கள் நமது நாட்டு இளைஞர்களே.

- இவ்வாறு நீர்ப்பாசன, நீர்முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி நவகிரி நீர்ப்பாசன அலுவலகத்தில் அரசாங்க அதிபர் எஸ்.சண்முகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை, த.தங்கவடிவேல் எம்.பி., திட்டமிடல் அமைச்சின் செயலாளர் அலிசாகிர் மௌலானா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் கூறியதாவது:-

"தண்ணீருக்கு நிறமில்லை. அதே போல மனிதர்களிடத்தில் நிறமிருக்கக் கூடாது. இன்று வடக்கு - கிழக்கிலே ஏற்பட்டுள்ள அமைதியான சூழல் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் புலிகளின் தலைவர் பிரபாவிற்கும் நன்றி கூறவேண்டும். நாங்கள் அனைவரும் இலங்கையர்கள். சுத்தமான தமிழன், சுத்தமான சிங்களவர் எனக்கூற விரும்புகின்றோம். தமிழ், சிங்கள புதுவருடத்தை ஒன்றாகவே கொண்டாடுகின்றோம். அப்படியானால் ஏன் சண்டை பிடிக்கின்றோம்?

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகவும் இதய சுத்தியுடன் சமாதானத்தை விரும்புகிறார். நாங்கள் அனைவரும் இச்சமாதானம் நிரந்தரமாகவேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை குறிப்பிட்ட பிராந்தியத்திற்காக மட்டும் உழைப்பவனல்லன், முழு நாட்டிற்குமாக உழைப்பவன். என்னிடம் சாதி, சமய, இனவேறுபாடு கிடையாது. யுத்தத்தினால் வடக்கு - கிழக்கு மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக புலிகளின் பிராந்தியத தலைவர் பூவண்ணன் என்னிடம் தெரிவித்தார்."

- இவ்வாறு கூறினார் அமைச்சர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகப் பெரிய நீர்ப்பாசனக் குளமான உன்னிச்சைக்குளம் பல கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. விடுதலைப் புலிகளின் பிராந்திய தலைவர்களுடன் இக்குளத்தை நீர்ப்பாசன, நீர்முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா நேரில் சென்று பார்வையிட்டார்.

புலிகளின் சிறப்பு அரசியல் பொறுப்பாளர் எஸ்.கரிகாலன், மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் விசு, துணை அரசியல் பொறுப்பாளர் துரை, திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிசாகிர் மௌலானா, அமைச்சு உயரதிகாரிகளும் அமைசருடன் சென்றிருந்தனர்.

1917ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியில் அமைக்கப்பட்ட இக்குளம் 54,100 ஏக்கர் அடி பரப்பளவைக் கொண்டதாகும். 9 ஆயிரம் ஏக்கர் நெற் காணிகள் இக்குளத்திலிருந்து நீரைப் பெறுவதாக உறுகாமம் நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்தார். இக்குளக்கட்டு உயர்த்தப்பட்டு நவீன வசதிகளுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. ஓ)

## ஜனாதிபதி....

9ஆம் பக்கத் தொடர்ச்சி

தருவதற்கு அமைச்சரவையின் சில உறுப்பினர்கள் முயல்கின்றனர்.

இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் அடிச்சட்ட இலக்கம், இயந்திர இலக்கம், பதிவு இலக்கம் என்பவை ஜனாதிபதிமீது தாக்குதல் நடத்தும் திட்டத்தை தீட்டுபவர் களுக்கே தேவையானது. இந்த அமைச்சர்கள் இந்த ஆடம்பரக் கார்களில் சிலவற்றைப் பயன்படுத்திவரும் பிரதமரின் உயிரையும், வேறு சில அமைச்சர்களின் உயிர்களையும் ஆபத்திற்குள்ளாக்கப் பார்க்கிறார்கள்.

பாதுகாப்பு நோக்குடன் உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்கள் என்னென்ன வகையான ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கு எவ்விதமாகச் செய்யப்பட்டன என்ற நுட்பவிவரங்கள், அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட இயந்திர இலக்கங்கள், அடிச்சட்ட இலக்கங்களால் இனங்காணப்பட முடியும்.

புலிகளோ அல்லது எந்தவொரு எதிரியோ இந்த இலக்கங்களைப் பெற்றுக்கொண்டு வாகனங்களை உற்பத்தி செய்த நிறுவனத்தின் இலக்கப்பட்டியல்களில் தேடிப்பார்த்துவிட முடியும்.

எந்த வாகனம் குறிப்பாக எந்தத் தலைவரால் பயன்படுத்தப்படுகிறது என்ற விவரம் இவ்வழிகள்மூலம் எதிரிக்குச் சென்றுவிடமுடியும். இதனையே சில அமைச்சர்கள் விரும்புகிறார்கள். இந்த அமைச்சரவை உப குழு சேகரிக்கும் இந்தப் பெறுமதியான தகவல்கள் சில பத்திரிகைகளுக்குக் கிடைக்கின்றன.

எனவே, வாகனங்கள் பார்வையிடப்படலாம். ஆனால், பிரதமரும், அவரால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு அதிகாரியும் ஜனாதிபதி மாளிகைக்கு வந்து வாகனங்களைப் பார்வையிடலாம். பாதுகாப்பு வாகனங்களின் விவரங்களை நான் வேறு எந்தவொரு அமைச்சருக்கும் காண்பித்து எனதும், பிரதமரினதும், வேறும் சிலரினதும் உயிர்களைப் பலியிட விருப்பவில்லை.

- இவ்வாறு வழக்கம்போலவே பாதுகாப்பின் மீது பழியைப் போட்டு ஜனாதிபதி பதிலளித்துவிட்டார். தன் பேரில் பணமோசடி இல்லை என்பதை அவர் தெளிவாகக் காட்டிவிட்டார்.

இதனால், அரசியற்குற்றச்சாட்டு பிரேரணை வலுவிழந்துபோகலாம். ஆனால், ஜனாதிபதி ஆரம்பத்திலேயே தெரிவித்ததுபோன்று அமைச்சர்கள் குற்றச்சாட்டுகளை புதிதுபுதிதாக முன்வைப்பார்களா?

பாம்பு கடிக்கமுன் அதனை அடிக்க வேண்டும் என்று அவர்கள் அவசரம் காட்டுகிறார்கள். நாடாளுமன்றம் கலைக்கப்படும் முன் அதனை கலைப்பவரை கலைக்கவேண்டும். முடியுமா?

*நன்றி: சுடர்ஒளி.*

## சமய சந்நிதிகளில்

குருநகர்,ஜூலை25

பாண்டியன்தாழ்வு சந்தானமாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி காலை 7 மணிக்கு நடைபெறவுள்ள திருவிழாத் திருப்பலியுடனும் தொடர்ந்து இடம்பெறவுள்ள சுற்றுப்பிரகாரம், திருச்சொரூப ஆசீருடனும் நிறைவுபெறவுள்ளது.

கடந்த 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள இவ்வாலயத் திருவிழாவில் நவநாள் ஆராதனைகள் மாலை நேரங்களில் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 5மணிக்கு நற்கருணை ஆராதனை இடம்பெறும். (எ-51)

★ ★ ★

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி இன்று காலை நடைபெறவுள்ளது.

காலை 5.30மணிக்கு முதற் திருப்பலியும். காலை 7மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும்.

பி.ப. 5.30மணிக்கு தேர்ப்பவனி இடம்பெறும். (எ-51)

★ ★ ★

இளவாலை புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

காலை 7மணிக்கு திருநாள் திருப்பலியும் பின்னர் திருச்சொருபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.(ஒ-8)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை25

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை கதிர்காமத் தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

மாலை 4 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் திருவிழா ஆரம்பாகித் தொடர்ந்து 5.30மணிக்கு சுவாமி வீதியுலா வருதல் இடம்பெறும். (எ-17)

★ ★ ★

மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 5மணிக்கு திருப்பலியும், நற்கருணை ஆராதனையும் இடம்பெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு திருநாள் திருப்பலி, திருச்சொருபப்பவனி, சொருப ஆசீர் என்பனவற்றுடன் விழா நிறைவுபெறும். (எ)

★ ★ ★

தென்மராட்சி,ஜூலை22

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித விகோரியார் தேவாலய நவநாள் உற்சவம் அடுத்தமாதம் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஓகஸ்ட் மூன்றாம் திகதி மாலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலி பூசையும் இடம்பெற்று மறுநாள் காலை 7 மணிக்கு திருநாட்பாடற் பலி பூஜையும் திருச்சொருபப் பவனியும் இடம்பெறும்.

கடந்த இரண்டு வருடங்களாக இத்தேவாலயத்தின் உற்சவம் இடம்பெயர்வு காரணமாக இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)


கரம்பகம் விவசாய சம்மேளனம்

பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு.இராசையா தெய்வேந்திரம்பிள்ளை
(யாழ். பல்கலைக்கழக நூலக கவனிப்பாளர்)

அவர்கள் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவருடைய சேவைகள் மேன்மேலும் சிறப்படைய வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கரம்பகம் விவசாய சம்மேளன
நிர்வாக சபை உறுப்பினர்களும்
அங்கத்தவர்களும்.

(சி-23046)



JAFFNA COLLEGE
Undergraduate Dept.
No. 464, Hospital Rd., Jaffna.

G.A.Q., B.A. (Part I), B.A. (Final)
வகுப்புகள் ஆரம்பம்: 27.07.2002 சனி
✪ஆங்கில இலக்கியம், மொழியியல்
உட்பட சகல பாடங்களும் ஆரம்பமாகின்றன.
✪ விசேட சிங்கள வகுப்புகள்
ஆசிரியர்: லீலாகிருஷ்ணன்
சனி மாலை 4.00 மணிக்கு ஆரம்பம்.
- பதிவாளர்.

(சி-23047)



கணனி இயக்குநரும்
தட்டச்சாளரும் தேவை.
முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
திருஞானாஸ்
கட்டடம்
141, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(361)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் கடமையாற்றும் நல்லாசிரியர்களான திரு.தி.சுகுமாரனதும், செல்வி கலையரசி திருநாவுக்கரசு அவர்களதும் அன்புத் தாயார்

**திருமதி சரஸ்வதி திருநாவுக்கரசு**

அவர்கள் 22.07.2002 திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். இத்துயரச் செய்திகேட்டு நாம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.

(6357)

## மரண அறிவித்தல்

**திருமதி கந்தையா கனகம்மா**

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா கனகம்மா அவர்கள் நேற்று (24.07.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரு கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவபாக்கியம் சொர்ணலிங்கம் அவர்களின் அருமைச் சகோதரியும், விக்கினேஸ்வரி அவர்களின் அன்புத் தாயாரும் கோபாலகிருஷ்ணன் (M.S.O., யாழ்.பிரதம தபாலகம்) அவர்களின் அன்பு மாமியாரும், தசோதரன் (இணுவில் மத்திய கல்லூரி மாணவன்), சாயிபானு (யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலய மாணவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2002) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவருடைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகத் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"தாயகம்",*
*வட்டுவினி லேன்,*
*இணுவில் மேற்கு, இணுவில்.*

தகவல்:
நா.கோபாலகிருஷ்ணன்
(மருமகன்)

(632)

## மனித குலத்துக்கே அவமானம்

# அமைச்சரின் அங்கலட்சணத்தை கேவலமாக வர்ணித்த ஜனாதிபதி

## ராஜித சேனரத்ன சாடல்

கொழும்பு,ஜூலை25

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனிநபர்களின் அங்கலட்சணங்களை கேவலமாக வர்ணித்துக் குறை கூறியிருக்கிறார். இது மனிதகுலத்துக்கு அவர் இழைத்துள்ள அவமானம் ஆகும்.

- இவ்வாறு காணி அமைச்சர் ராஜித சேனரத்ன ஜனாதிபதியின் பொலன்னறுவைப் பேச்சுக்குப் பதிலடி கொடுத்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எம்மிடையே அரசியல் ரீதியாக வேறுபாடுகள் இருப்பினும் சந்திரிகா குமாரதுங்க தொடர்ந்தும் எமது நாட்டின் ஜனாதிபதியாவார்.

ஜனாதிபதி கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலன்னறுவையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் பேசும்போது பல தனிப்பட்டவர்களின் உடலமைப்புகளை வர்ணித்துப் பேசியது மனிதத்தன்மைக்கு விடுக்கப்பட்ட அகௌரவமாகும்.

குறிப்பிட்ட அமைச்சர் ஒருவரின் உடல் அமைப்புக் குறித்து பல தடவைகள் பிரஸ்தாபித்தது மிகவும் துன்பகரமானதாகும். மேலும் மனித நேயம் படைத்தவர்கள் குறித்து அவர் குறை கூறியது மனிதநேயமற்ற செயலாகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கண்களை மூடியவாறு இருக்கும் படத்துடன் ஊர்வலம் சென்ற பெண் மீது ஜனாதிபதியின் பொ.ஐ.முன்னணியின் ஆட்சிக் காலத்தில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுமல்லாமல் அவரது வீடும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது என்பதை ஜனாதிபதிக்கு ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

ஜனாதிபதி தற்போது அவரது வாகனம் குறித்த குற்றச்சாட்டு, அவரது கைப்பை தொடர்பான குற்றச்சாட்டு மற்றும் றப்பர் தொழிற்சாலை தொடர்பான கோடிக்கணக்கில் பணம் பெற்றமை தொடர்பான குற்றச்சாட்டு எனப் பல்வேறு குற்றச்சாட்டுகளின் மத்தியில் அவர் மக்களின் முன்பாக என்ன வேடத்தைப் போட்டாலும் எதனைக் கூறினாலும் அவை எமக்குப் பிரச்சினைகள் அல்ல. உண்மையை மக்களிடம் அவர் மறைக்க முடியாது. சட்டபூர்வமான விசாரணைகள் மூலம் மக்களுக்கு உண்மை தெரியவரும்போது ஜனாதிபதியின் நடிப்புக் குறித்து மக்கள் ஒரு முடிவை வழங்குவர்.

இருப்பினும் மனிதர்களின் உடல் ஊனங்கள் குறித்துக் கேலிசெய்வது ஒரு நாட்டின் தலைவி செய்யும் செயலல்ல. அத்தனகலவிலுள்ள படிக்காத கிராமப் பெண்கூட அவ்வாறு நடந்து கொள்ளமாட்டார்.

ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது எனக் கூறிக்கொண்டே அவர் இவ்வாறு கேலி செய்து வருகிறார்.

அமைச்சர் ரவி கருணாரத்தினவை மாத்திரமன்றி பிரதமர் உட்பட முழு அமைச்சரவையையுமே வீட்டுக்கு அனுப்பமுடியும் என ஜனாதிபதி ஆவேசமாகக் கூறியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சந்திக்க வாய்ப்பு வழங்கியதால் உருவான பொறாமை மற்றும் ஆத்திரம் காரணமாகவே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை சந்திக்க ஜனாதிபதி சந்திரிகா இருமுறை முயன்றுள்ளார். இருப்பினும் அவருக்கு சந்திக்க வாய்ப்பு வழங்கப்படவில்லை. 1984 இன் பின்னர் ஸ்ரீலங்காவின் தலைவர் ஒருவர் அமெரிக்க ஜனாதிபதியை வெள்ளை மாளிகையில் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும் பிரதமர் ரணிலுக்கு இந்த வாய்ப்புக் கிடைத்தது, ஜனாதிபதி சந்திரிகாவுக்குப் பொறாமையை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் ரணில் அமெரிக்காவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்தபோது உருவாகாத, அமைச்சர் ரவி கருணாரத்தின குறித்த பிரச்சினை பிரதமர் அமெரிக்கா விஜயத்தை மேற்கொண்டதும் தற்போது ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதற்குக் காரணம் பிரதமரின் அமெரிக்க விஜயத்தால் ஏற்பட்ட பொறாமையே ஆகும்.

அது, இது, பேய், அங்கை இங்கே, உங்கை போன்ற சொற்களைப் பயன்படுத்தி ஜனாதிபதி பொலன்னறுவையில் பேசிய பேச்சுக்கள் முழுவதும் பொறாமையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையின் அமைதி முயற்சிகளுக்கு தமிழகம் தடைக்கல்லாகக் கூடாது!

## உலகத் தமிழர் பேரவை நிகழ்வில் செல்லச்சாமி உரை

சென்னை,ஜூலை.25

இலங்கையில் சமாதானம் வேண்டுமென்று தமிழக மக்கள் உணர்வுபூர்வமாக கூறும்போது தமிழக அரசியல் தலைமைப்பீடம் மட்டும் மாறுபாடாகச் செயற்படுவது மனித தர்மம் ஆகாது. தமிழகத்தை நாம் தாய்நாடு என்கிறோம். அங்கு பிறக்காத நம்மைப் போன்றவர்களுக்கு தமிழகம் தந்தை நாடே எனலாம். தாயோ, தந்தையோ தமது குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்பட இடம் வைக்கமாட்டார்கள்; வைக்கவும் கூடாது. அந்த வகையில் நமது நாட்டின் இன்றைய சமாதானப் பயணத்தை இனிதே தொடர தமிழக அரசியல் தலைவர்கள் குறுக்கே தடைக்கற்களாக நிற்கக்கூடாது.

இவ்வாறு சென்னை எழும்பூர் டொன் பொஸ்கோ பாடசாலை கலை அரங்கில் நடைபெற்ற உலகத் தமிழர் பேரமைப்பின் தொடக்க விழா மாநாட்டில் உரையாற்றிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பொது வசதிகள் சபைத் தலைவருமான எம்.எஸ்.செல்லச்சாமி கூறினார்.

'உலகத் தமிழர் இணைப்பு' என்ற தலைப்பிலான கருத்தரங்குக்கு செல்லச்சாமி தலைமை வகித்துப் பேசினார்.

செல்லச்சாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'உலகத் தமிழர்களை ஒன்று கூட்டி இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்தும் பழ.நெடுமாறனை தமிழ் கூறும் நல்லுலகம் பாராட்டுகிறது. தமிழர்களுக்கு அநீதி ஏற்படும் போதெல்லாம் குரல் கொடுத்து போராடுபவர் நெடுமாறன். இன்றைய நாளை தமிழர் தம் வரலாற்றில் பொன்னான நாளாகக் காண்கிறேன். "உலகத் தமிழர் தினம்" என்று இந்த நாளை பெருமையாக அழைக்கலாம்.

இன்று உலகத் தமிழர்கள் உலகளாவிய ரீதியில் வியாபித்து வாழ்கின்றனர். இலங்கை, மொரீஷியஸ் மற்றும் பிஜித் தீவுகளில் ஒப்பந்தங்களின் மூலமாக அனுப்பப்பட்ட இந்தியத் தமிழர்கள் வாழ்கின்றனர். தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களின் உணர்வுகளும் எதிர்பார்ப்புகளும் ஒன்றாகவே உள்ளன. அவர்கள் செல்லும் நாடுகளில் எல்லாம் மொழி, கலை, கலாசாரங்களைச் சாகவிடாமல் அவர்கள் கட்டிக்காத்து வந்துள்ளனர். இது தமிழர்களுக்கு உரிய சிறப்பாகும்.

இலங்கையில் 1983இல் இதே ஆடி மாதத்தில் தோன்றிய இனக்கலவரம் உலகத் தமிழர் வரலாற்றில் ஒரு திருப்பத்தை உருவாக்கியது. நாடு கடந்து அகதிகளாக தமிழர்கள் செல்லும் பரிதாபநிலைக்கு இந்தக் கலவரந்தான் வழிவகுத்தது. பாரதியாரின் கனவை நனவாக்கிய பரம்பரையினரும் இவர்களே. தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச் செய்தவர்களும் இவர்களே.

பிஜி, மலேசியா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் தமிழ் மொழியை மறந்துள்ளனர். இது கவலை தருவதாகும். மொழிக்கு ஆபத்து வரும்போது கலாசாரம் அழியும். கலாசாரம் அழிந்தால் சமூகமே அழியும். எனவே, மொழியைப் பாதுகாக்க நாம நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

ஐரோப்பிய நாடுகள் எல்லாம் ஐரோப்பிய ஒன்றியத்தின் கீழ் ஒன்று திரண்டு தமது அலுவல்களை வெற்றியாக மேற்கொண்டு வருகின்றன. சார்க் நாடுகள் மற்றுமொரு அமைப்பின்கீழ் செயற்பட்டு வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையும் அதன் கீழ் வரும் துணை நிறுவனங்களும் உலகளாவிய ரீதியில் பணி செய்கின்றன.

அரபு லீக்கும் இதே அமைப்பில் செயற்படுகிறது. இவ்வாறே உலகத் தமிழர்கள் ஏன் ஓர் அமைப்பின் கீழ் ஒன்றுபட்டு பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள இயலாது? இதனை நாம் ஆழமாகச் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

உலகத் தமிழர் இணைப்பைப் பற்றி பேசும் நாம் வாய்ப் பேச்சுடன் மட்டும் நிற்காது, உலகத் தமிழர் பேரவையின் உயரிய இலட்சியங்களை உயிர் துடிப்பு மிக்கதாக மாற்ற வேண்டும். தமிழர் தம் ஐக்கியமே எமது சமுதாய விடிவின் அடிநாதமாக இருக்கவேண்டும்? -

இவ்வாறு செல்லச்சாமி குறிப்பிட்டார். (ஒ)

### நிவாரணம் பெறுவதில் சிக்கல்

தென்மராட்சி,ஜூலை25

தென்மராட்சி பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களில் பெரும்பாலானோர் ஜூன் மாத நிவாரணம் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வலிகாமம் மற்றும் வடமராட்சி பகுதிகளில் தங்கியிருந்த தென்மராட்சி மக்கள் அப்பகுதியில் இயங்கிய தென்மராட்சி பிரதேச பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளில் நிவாரண உலர் உணவுப் பொருள்களை பெற்றுவந்தனர்.

இவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்த பின்னர் ஜூன் மாத நிவாரணம் பெறுவதற்கு ஏற்கனவே நிவாரணம் பெற்ற கடைகளில் வெட்டி எடுக்கப்பட்ட உணவு முத்திரையின் அடிக்கட்டையை மீளப் பெற்று வந்து ஒப்படைக்க வேண்டுமெனவும் - அதன்பின்னரே நிவாரணம் வழங்க முடியுமெனவும் சங்கக் கிளைக் கடைகளின் முகாமையாளர்கள் தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது.

இதனால் மக்கள் முன்னர் தாம் தங்கியிருந்த பகுதிகளுக்குச் சென்று உணவு முத்திரையின் அடிக்கட்டையைப் பெற பல தடவைகள் அலைந்து திரிவதாகத் தெரிவித்தனர். (ஒ-117)

### நாட்டுக்கூத்து விழா

மாகாண மட்ட தமிழ்மொழித்தின விழாவும் நாட்டுக்கூட்டு விழாவும் செப்ரெம்பர் மாதம் ... 9ஆம் திகதிகளில் ...னத்தில் நடைபெறவுள்ளன.

இது தொடர்பான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மாகாணக் கல்வியமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

### வீதிகளை திருத்துவதில் பாராமுகம்

குருநகரிலுள்ள பல வீதிகள் சேதமடைந்த நிலையிலேயே தொடர்ந்தும் இருந்து வருவதனால் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் மிகுந்த அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றார்கள்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ்வரும் வீதிகளும் யாழ். மாநகரசபையின் அதிகாரத்துக்குட்பட்ட வீதிகளும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

குருநகர் கடற்கரை வீதி, தண்ணீர்தாங்கி சந்தி, பாங்ஷால் வீதி ஆகியவைகளும் டேவிட் வீதி, குருநகரிலுள்ள குறுக்குவீதிகள் பலவும் பாரியளவில் சேதமடைந்துள்ளன.

இவைகளைத் திருத்தியமைக்குமாறு குருநகரிலுள்ள பல பொது அமைப்புக்கள் வீதி அதிகாரசபை, யாழ்.மாநகரசபை ஆகியவைகளைக் கோரி பலதடவைகள் மகஜர்களை வழங்கிய போதிலும் இவ்வீதிகள் திருத்தியமைக்கப்படவில்லை என இங்குள்ள பொது அமைப்புக்கள் தெரிவித்தன. (ஒ-51)

# சிறை மரணத்துக்கு அரசே பொறுப்பு விசாரணையை விட்டுவிடக்கூடாது!

## தாயார் மூலம் மனுவை விசாரிக்க உயர்நீதிமன்றிடம் வேண்டுகோள்

கொழும்பு,ஜூலை25

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது மனுதாரர் மரணமடைந்துள்ளார். எனவே இந்த மரணத்திற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். மரணமானவரின் தாயின் மூலம் இவ்வழக்கு விசாரணையைத் தொடர்ந்து நடத்த உயர்நீதிமன்றம் உத்தரவு வழங்கவேண்டும். இவ்வாறு மனுதாரரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி டாக்டர் திலகர் திருநாவுக்கரசு உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜேசுதாசனின் மனு மீதான விசாரணையின்போதே சட்டத்தரணி திருநாவுக்கரசு இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 1999ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் திகதி ஜேசுதாசன் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் பொலிஸ் நிலையத்தில் வைத்துக் கடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார். கண்கள் மூடப்பட்ட நிலையில் வாயில் பெற்றோல் நிரம்பிய பையொன்று திணிக்கப்பட்டு முழங்கால்களுக்குக் கீழ் இரும்புக் கம்பியினால் தாக்கப்பட்டுள்ளார்.

தனது கைதும், தடுப்புக் காவலும் அரசமைப்புச் சட்டத்தின் 11, 13(1), 13(2) ஆகிய பிரிவுகளின் கீழ் மனித உரிமையை மீறுவதாக ஜேசுதாசன் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

ஜேசுதாசன் கைதுசெய்யப்பட்டு 45 நாள்களுக்குப் பின்னரே வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். பின் களுத்துறைச் சிறைச்சாலையில தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

களுத்துறைச் சட்ட வைத்திய அதிகாரியினால் மனுதாரர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு மருத்துவ அறிக்கை 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கிடையில் களுத்துறைச் சிறைச்சாலையில் 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி இடம்பெற்ற அசம்பாவித சம்பவமொன்றில் மனுதாரரான அந்தோனிப்பிள்ளை ஜேசுதாசன் மரணமானார். 2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6ஆம் திகதி இவரது மரண அத்தாட்சிப்பத்திரம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இவரது மரணத்தின்பின் இவரது தாயாரான கண்மணி அந்தோனிப்பிள்ளை மூலம் மனுவைத் தொடர்ந்து விசாரணை செய்ய உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணி டாக்டர் திலகர் திருநாவுக்கரசு அனுமதி கோரினார்.

இதற்குப் பொலிஸ் தரப்பில் கடும் எதிர்ப்புத், தெரிவிக்கப்பட்டது. கடந்த 19ஆம் திகதி பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ஷிராணி பண்டாரநாயக்கா, ஜே.ஏ.என்.டி.சில்வா, ஆகியோர் முன்னிலையில் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மனுதாரரின் சார்பில் ஆஜரான டாக்டர் திலகர் திருநாவுக்கரசு தமது வாதத்தின்போது இரண்டு காரணங்களை முன்வைத்தார்:

மனுதாரர் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டிருந்தார். பின்பு அவர் சிறையில் மரணமானார்.

அவர் தாக்கப்பட்டதற்குப் பொலிஸார் பதில் சொல்லியே ஆகவேண்டும். இவரது மரணத்திற்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். எனவே, இந்த மனுவை காலமான மனுதாரரின் தாயாரின் மூலம் தொடர்ந்து விசாரணை செய்ய உயர்நீதிமன்றம் உத்தரவு வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இதுகுறித்து ஆராய்ந்து முடிவெடுக்க எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதிக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

(ஒ)

### அனல்மின் நிலையம் நிறுவப்படமாட்டாது

# துறைமுக அபிவிருத்தியே திருமலையில் முக்கியம்!

### சம்பந்தன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு,ஜூலை25

திருகோணமலை கிளப்பன் பேர்க் பகுதியில் எந்தக் காலத்திலும் அனல்மின் நிலையம் அமைக்கப்படமாட்டாது. இப்பகுதி துறைமுக அபிவிருத்திக்கு உரிய இடமாக இருப்பதால் இந்நிலை தோன்றமாட்டாது.

- இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலையில் அனல்மின் நிலையம் அமைக்கப்படுவதைக் கண்டிக்கும் கூட்டம் ஒன்று திருகோணமலை கிழக்கு புனர்வாழ்வுக் கழக அலுவலகத்தில் சமீபத்தில் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். கழகத்தின் தலைவரும் சட்டத்தரணியுமான கா.சிவபாலன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இரா.சம்பந்தன் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

திருகோணமலை மாவட்டம் இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டது. இது உலகில் இரண்டாவது இயற்கைத் துறைமுகம். திருகோணமலையில் அனல்மின் நிலையம் அமைக்கும் திட்டம் 1983, 84 காலப்பகுதியில் ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டது. அரசு முன்னெடுக்கும் திட்டம் அதன் தொடர்ச்சியே. இங்கு முதலீடு செய்ய அமெரிக்கக் கம்பனி ஒன்று வர விருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இதுவரை எந்த நிறுவனமும் பொறுப்பேற்க முன்வரவில்லை.

போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்த பிற்பாடு அரசு பாரிய முதலீடுகளை எமது பிரதேசங்களில் செய்ய விரும்பவில்லை. யுத்தம் முடிவடைந்த நிலையில் வேறு விதமான அதிகாரங்கள் எமக்கு இருத்தல் வேண்டும். சகல அதிகாரங்களும் கொண்ட இடைக்கால நிர்வாகம் எம்மிடம் இருக்கவேண்டும். இதன்மூலம் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

பேச்சுக்கள் எப்போது ஆரம்பிக்கும் என்று சொல்லமுடியாது. அதிகம் தாமதம் இன்றி ஆரம்பிக்கும் என்று கருதுகிறோம். தாய்லாந்தில் ஆவணி மாதம் 2ஆம் திகதிக்கு பின்னர் பேச்சு ஆரம்பிக்கப்படலாம்.

இப்பேச்சுக்களில் முதலாவதாகப் பேசப்படும் விடயம் இடைக்கால நிர்வாகம். இதன்மூலம் வடக்கு - கிழக்கில் அதிகாரப் பரவல் தாமதமின்றி ஏற்படுத்தப்படும். முறையான நிர்வாகத்தைப் பெறக் கடுமையாக உழைக்கவேண்டும். சிறந்த நிர்வாகம் ஏற்படுத்தப்படுவதற்கு வழி பிறக்கும் என்று நினைக்கின்றோம்.

திருகோணமலை மாவட்டம் கூடிய வளம் கொண்ட ஒரு மாவட்டம். துறைமுகம், விவசாயம், கைத்தொழில், கடற்றொழில், உல்லாசத்துறை போன்ற பல துறைகளில் அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

துறைமுக அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படும்போது அது இவ்விடத்திலேயே ஆரம்பிக்கப்படும். இதனால் அனல்மின் நிலையம் அமைக்கப்படுவதை அனுமதிக்கமுடியாது. துறைமுகம் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படின் வடக்கு-கிழக்கு இளைஞர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்கமுடியும். துறைமுக அபிவிருத்தி மூலமாக விமான நிலைய அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும்.

- இவ்வாறு கூறினார் சம்பந்தன் எம்.பி. (ஒ)



இலங்கை ஆசிரியர் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் வருடாந்தக் கூட்டம் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது. யாழ்.மாவட்டத் தலைவர் சா.தியாகலிங்கம் உரையாற்றுகிறார். இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் பேர்ட்டி இரணவீர, செயலாளர் எல்.ஜெயதுங்கா, யாழ்.மாவட்ட செயலாளர் சு.பாலசந்திரன் மற்றும் உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். *படம்: வலிகாமம் தெற்கு செய்தியாளர்*

# வ.பி.போக்குவரத்துச் சபை சிறப்பாகச் செயற்படுகிறது!

### மத்திய பகுதி முகாமையாளர் பாராட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை25

ஏனைய பொதுப் போக்குவரத்து நிறுவனங்களின் சேவைகளுடன் ஒப்பிடுகின்றபொழுது வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் சேவைகள் பாராட்டப்படவேண்டியவையே.

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் பி.எச்.எம்.ரட்ணஸ்ரீ.

நேற்று வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் பணிமனைக்கு வருகைதந்தவேளையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பல்வேறு சிரமங்களின் மத்தியில் மிகவும் குறைந்த வசதிகளுடன் மக்களுக்கு பெரும் சேவையாற்றிவருவதை நாம் இங்கு நேரில காணக்கூடியதாக உள்ளது. ஊழியர்கள் தமது கடமைகளை நேர்த்தியாகச் செய்வதையும் பஸ்கள் மற்றும் பணிமனைகள் யாவும் துப்புரவாக இருப்பதையும் கண்டோம்.

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவருகின்ற வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்பற்றி நேரில் கேட்டறியவும் அவர்களுக்கு எம்மால் முடிந்தவற்றைச் செய்யவுமே நாம் இங்கு வருகைதந்தோம். ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டியது எமது கடமை.

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு சுற்றறிக்கையை அனுப்பியிருந்தார். மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதிகளுக்கு எம்மை நேரில் சென்று அங்குள்ள பிரச்சினைகளைக் கேட்டறிந்துகொள்ளுமாறு அதில் பிரதமர் எம்மைக் கேட்டிருந்தார். நாம் இங்கு வந்தமைக்கு அதுவும் ஒரு காரணமாகும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் நிலவும் பணப் பற்றாக்குறையைப் போக்கமுடியாதா என்று செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு அவர், கடந்த சில மாதங்களுக்கு முன்பு 30 பஸ்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கம் தெரிவித்தபோதும் அரசின் அனுமதியும் எமது அமைச்சின் அனுமதியும் இதுவரையும் கிடைக்காத காரணத்தால் அவற்றை அனுப்பிவைக்க முடியவில்லை எனப் பதிலளித்தார்.

ஏ-9 தரைவழிப்பாதை திறக்கப்பட்டு மூன்று மாதங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவையை நடத்துவதற்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை எனவும்-

இது தொடர்பான பேச்சுக்கள் உரிய தரப்பினர்களுக்கிடையில் நடைபெற்று வருகின்றபோதும் அதில் எமது பிரதிநிதிகள் எவரும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை எனவும் - அப்போது பி.எச்.எம்.ரட்ணஸ்ரீ மேலும் குறிப்பிட்டார்.

(ஒ-10)

# தெற்கில் பலாமரங்கள் வளர்ப்பு; வடக்கில் பனைமரங்கள் அழிப்பு

### சமாதான காலத்திலும் அழிவுகள் ஓயவில்லை

பலாமர அபிவிருத்தித் திட்டம் பெருமெடுப்பில் அரச அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஒரு லட்சம் பலாமரங்கள் நடுகை செய்யும் நிகழ்ச்சித்திட்டம் கண்டியில் இப்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

கண்டியில் பலாமர நடுகைத் திட்டத்தை மல்வத்தை, அஸ்கிரிய பீட மகாநாயக்கர்கள் இருவரும் சேர்ந்து ஆரம்பித்துவைத்தனர்.

இருவரும் நல்ல இனப்பலாக் கன்றுகள் மூன்றை நட்டனர். அத்துடன் நடுகை ஆரம்பமானது. 'செவன' லொத்தர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியிருந்தன.

உப உணவு உற்பத்தியில் நாடு மேன்மேலும் வளர்ச்சியை அடைவதுடன் அதில் தன்நிறைவையும் பொருளாதார அனுகூலங்களையும் அடையும்.

பலாமர நடுகையை ஊக்குவிக்க பத்திரிகைகள் கட்டுரை, கவிதைப் போட்டிகளையும் நடத்துகின்றன. அது உப உணவு உற்பத்திப் போராக முன்னெடுக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டின் வடபகுதியில் பனை, தென்னை மரங்கள் தினமும் வெட்டி அழிக்கப்படுகின்றன.

யுத்தம் தொடங்கிய காலத்தில் இருந்தே நடைபெற்றுவந்த தொடர்ச்சியான அழிவுகளால் வடபகுதியில் ஒரு லட்சம் வரையிலான பனைமரங்கள், தென்னைமரங்கள் அழிந்துவிட்டன.

படையினர் நூற்றுக்கணக்கில் இவற்றைத் தறித்து தமது பாதுகாப்பு அரண்கள் மற்றும் சாவடிகளில் பயன்படுத்துகின்றனர்.

திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பனை அழிப்பைக் கண்டித்து ஜூலை 14ஆம் திகதி மக்கள் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

நாவற்குழி, தச்சன்தோப்பு, கோவிலாக்கண்டி, வேம்பிராய் பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் நூற்றுக்கணக்கில் ஒன்றுதிரண்டு போற்றாடி பேரணியை நடத்தினர்.

இதனையடுத்து, பனைமரங்கள் அழிக்கப்படுவது குறித்து படைத்தரப்பினருடன் கலந்துரையாடுவதற்கு குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

கோவிலாக்கண்டியிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட மக்கள் நாவற்குழி முகாமை வந்தடைந்து, படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினர்.

இதற்கிடையே இவ்விவகாரம் எம்.பிக்கள் சிலரால் கொடுக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாகப் பிரதமரின் கவனத்தை ஈர்த்திருந்தது. இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

பனைமரம் கற்பகதரு எனப் போற்றப்படுகிறது. அதன் கிழங்கும், ஒடியல், மா என்பன உப உணவுப் பொருள்களாக மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றவை.

பனைமரத்தில் மனிதனுக்கு தேவையற்ற பகுதியென்று எதுவுமேயில்லை. இதன் அபிவிருத்திக்கு அரச நிறுவனமான பனை அபிவிருத்திச் சபை இருக்கிறது. அதன் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு, விற்பனை நிலையங்கள் இருக்கின்றன.

பனஞ்சீனியும், பனஞ்சாராயமும், கள்ளும் பெரும் பண வருவாய்க்குரியன. கட்டடப் பொருள்களும் குறிப்பாக வீடுகளை இழந்த பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு மிகவும் தேவைப்படுகின்ற நேரம் இது. பல்வகைப் பயன்களுக்கும் இது பயன்படுவதாலேயே இதனைக் கற்பகதரு என்பர்.

ஆயிரக்கணக்கானவர்களுக்கு பனைமரங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொழில்வாய்ப்பை வழங்குகின்றன. இம்மரங்களை வெட்டித்தறிப்பது மாபெரும் குற்றமாகக் கருதப்படவேண்டும்.

சுதந்திர வர்த்தக வலயத்தின் தொழிற்சாலைகளை இழுத்து மூடினால் ஷ்ரேநாளில் புரட்சி வெடிக்கும் சூழ்நிலை தோன்றாதா? அந்த நிலைக்கு வடபகுதியில் நிலைமை மோசமடைந்துள்ளது.

இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் வாழ்ந்த மக்கள் மீளக்குடியமர்வதற்கு சொந்த இடங்களுக்குத் திரும்பியநிலையில் அங்கே அவர்களுக்கு எதுவும் இருக்காது.

மனித உயிர்கள் உட்பட அவர்கள் இழந்தவற்றின் நீண்ட பட்டியலில் இப்பொழுது பனை, தென்னை மரங்களையும் சேர்க்கவேண்டிய நிலை.

பனைமரங்கள் கணிசமான அளவு பேர்களுக்கு தொழிலும், வாழ்வும் கொடுத்து தஞ்சமளித்த தொழிற்சாலைகள் போன்றவை. இவைகள் தற்காலிக கொட்டில்களை அமைத்துக்கொள்ளத் தேவைப்படும் மரங்களை எடுப்பதற்கேனும் பயன்படமுடியாதனவாகிவிட்டன. எரிக்கும் விறகாகக்கூட பயன்படுத்தப்படுவதற்கு இல்லை.

படையினர் இம்மரங்களை வெட்டுவது ஏன்?

நாட்டின் சட்டங்களின்படி காட்டு மரங்களை வெட்டுவதே கடும் தண்டனைக்குரிய குற்றம். ஆனால், பனை அபிவிருத்திச்சபை என்னும் அரசாங்க நிறுவனத்தினால் பராமரித்துப் பாதுகாக்கப்படும் பனைமரங்கள் கேட்பாரின்றி தறிக்கப்படுகின்றன. இதற்கு அதிகாரமளித்தவர்கள் யார்?

மீள்குடியமர்வுப் பணிகளுங்கூட இதனால் சிரமத்திற்குள்ளாகும்.

பனைமரத்தின் மகிமையை நன்கு புரிந்துகொண்டு 'மில்க் வைற்' அதிபர் கனகராஜா பல்லாயிரக்கணக்கான பனம் விதைகளை நட்டு வைத்தார்.

பனைமரம் குறுகியகாலத்தில் வளர்ந்து பயன்தருவதல்ல. தென்னை மரம் போன்று அது மூன்று வருடங்களில் பயன்தராது.

யுத்தம் நடைபெற்றபோது வளங்கள் அழிந்தன. வழிபட்ட வணக்கத்தலங்கள் அழிந்தன. ஆனால், சமாதான ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னரும் அழிவுகள் தொடர்கின்றன. பனைமரங்கள் அழிவதேன்?

சம்பந்தப்பட்டவர்களின் புறக்கணிப்பும், அசமந்தப்போக்கும், அலட்சியமுந்தான் இதற்குக் காரணங்கள்.

படைத்தரப்பைப் பொறுத்தவரை வெற்றிகொண்ட பிரதேசத்தின் மீது வெற்றிகொண்ட படைகள் செய்யும் பெருமிதச் செயல்கள். புதிதாகப் பனம் விதைகளை நட்டு 10, 20 வருடங்கள் காத்திருந்தே மக்கள் மீண்டும் அவற்றின் பயன்களை அனுபவிக்க வேண்டுமா?

எனவே, படையினர் பள்ளிக்கூடங்களின் ஆக்கிரமிப்பை விட்டால் போதும், பனைவளங்களை ஆக்கிரமிக்கக்கூடாது. *நன்றி சுடர்ஒளி*

**யாழ்.மைந்தன்**

### கோடா வைத்திருந்த நபருக்கு அபராதம்

வலி.வடக்கு,ஜூலை25

கசிப்பு உற்பத்திக்கான 40 போத்தல் கோடா வைத்திருந்த சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து 9 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

சுன்னாகம் மதுவரித் திணைக்களத்தினால் கைதுசெய்யப்பட்ட வேப்பிடாம், அச்செழுவைச் சேர்ந்த அப்புத்துரை குணரத்தினம் என்பவருக்கே மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் இத்தண்டனையை விதித்தார். (ஒ-86)

யாழ்.மாவட்ட விவசாயிகளே ……………………!

போலியான பிரசாரத்தால் ஏமாறவேண்டாம்

★ உங்கள் தங்கப்பயிர் வெங்காயத்தினைப் பாதிக்கும் சகல களைகளையும் ஒரே தடவையில் கட்டுப்படுத்த -

கோல் 2 எக்ஸ் எல்

★ தாய் கோதிப் புழுக்களைக் கட்டுப்படுத்த -

அற்றப்புறோன் 5 ஈசி

★ ஊதாப்புள்ளி - குமிழ் அழுகல் நோய்களுக்கு -

டைத்தேன் எம் 45

★ பயிர்களின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு -

வுக்ஸோல் (திரவ உரப்பசளை)

எல்லாப் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளிலிருந்து பாதுகாக்க

CIC

தரமான விவசாய இரசாயனங்களையே பாவியுங்கள்!

*ஏக விநியோகஸ்தர்: பவானி களஞ்சியம், இராச வீதி, நீர்வேலி வடக்கு.*

*கிளை: கஜமுகா றேட் சென்ரர், 281, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*

கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டெட். 199, கியூ வீதி, கொழும்பு - 02.

*ஆபத்தானவை விவசாய இரசாயனங்கள் அவதானமாகப் பாவியுங்கள்.* (6354)

### சம்பள உயர்வுப் பேச்சு தோல்வியில் முடிவு

# மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஓகஸ்ட் 1முதல் ஒத்துழையாமைப்போர்

கொழும்பு,ஜூலை25

தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு தொடர்பாக நேற்று நடைபெற்ற இறுதிச் சுற்றுப்பேச்சும் தோல்வியிலேயே முடிந்தது.

இதனால் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் சகல தோட்டங்களிலும் ஒத்துழையாமை இயக்கப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என இ.தொ.கா. தலைவரும் வீடமைப்பு நிர்மாணத்துறைகள், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் கூறினார்.

நேற்று தோட்டக் கம்பனிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான இறுதிச் சுற்றுப்பேச்சு இராஜகிரியாவில் உள்ள தோட்டத் துரைமார் சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் தலைமையிலான தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அடிப்படைச் சம்பளமாக 121 ரூபாவும், 75 வீத வரவு போனஸாக 15 ரூபாவும், தேயிலை விற்பனை போனஸாக 15 ரூபாவாக மொத்தம் 151 ரூபா சம்பளம் வழங்கப்படவேண்டும் எனக கோரிக்கை விடுத்தனர்.

ஆனால், தோட்டக் கம்பனிகளே 121 ரூபா அடிப்படைச் சம்பளத்துடன் மேற்குறிப்பிட்ட ஊக்குவிப்புத் தொகையாக 142 ரூபா மட்டுமே வழங்கமுடியும் எனக்கூறிவிட்டனர். இதனை ஏற்கத் தொழிற்சங்கங்கள் மறுத்துவிட்டன. இதனால் இறுதிச் சுற்றுப்பேச்சும் தோல்வியில் முடிந்தது.

இந்தப் பேச்சுக்களில் இ.தொ.கா. சார்பில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம், இ.தொ.கா. பிரதித்தலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி, தேசிய அமைப்பாளர் இரா.யோகராஜன் எம்.பி., இ.தே.தோ.தொ. சங்கப் பொதுச் செயலாளர் ராஜா செனவிரத்ன, நிர்வாகச் செயலாளர் எம்.எஸ்.ஏ.எச்.மொஹிதீன் ஆகியோர், கூட்டக் கமிட்டியின் சார்பில் தலைவர் மொல்பிகொட, ஓ.ஏ.இராமையா, எஸ்.இராமநாதன் ஆகியோரும் கம்பெனிகளின் சார்பில் 22 கம்பனிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (ஐ)

# தன்னைக் கொல்லச் சதி என்கின்றார் ஜயலத்!

யாழ்ப்பாணம்,ஜூலை25

சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கில் ஆயுத வியாபாரிகள் என்னைக் கொலைசெய்ய முயற்சி மேற்கொண்டுள்ளனர். எனக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைப் பரப்பிவருகின்றனர்.

- இப்படிக் கூறினார் புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா.

தென்னிலங்கை ஊடகங்கள் சில தனக்கு எதிராக எழுப்பிவரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகக் கருதது வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான முயற்சிகளுக்கான நடவடிக்கைகளைப் பிரதமரும் நானும் முன்னின்று மேற்கொண்டுவருகின்றோம். இந்த முயற்சிகளைக் குழப்புவதற்காக எனக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சில தென்னிலங்கை ஊடகங்கள் பரப்பிவருகின்றன.

சமாதான முயற்சியைக் குழப்பி மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதன் மூலம் ஆயுதங்களை விற்பனை செய்யமுடியும் என்ற நப்பாசையில் ஆயுத வியாபாரிகள் சிலர் சில ஊடகங்களுக்கு பல கோடிக்கணக்கான பணத்தை வழங்குகின்றார்கள். அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டே இந்த ஊடகங்கள் சமாதான முயற்சிக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றன.

விடுதலைப் புலிகள் எனக்கு எதிராகச் செயற்படுவதாகப் பிரசாரம் செய்யப்படுகின்றது. கொழும்பில் இருந்து ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணம் வரும்போது தமிழீழ காவல்துறையினரே எனக்குப் பாதுகாப்பு வழங்கினர்.

தெற்கில் இருந்து வடக்கே வந்து சமாதானச் செய்தியை எடுத்துச்செல்லும் மக்கள் இத்தகைய ஊடகங்களின் தவறான பிரசாரத்தால் வடக்கே வர அச்சம் கொண்டுள்ளனர். இதனால் சமாதான முயற்சிகளுக்குப் பாதிப்பு ஏற்படும் - என்றார் அமைச்சர் ஜயலத். (ஐ-3)

ஞானோதய அக்கடமி
சாவகச்சேரி.
எழுதுநர் சேவைப் போட்டிப் பரீட்சைக்கான வகுப்பு
26.07.2002 12.00 P.M. (பு.நே.)
ஆசிரியர்:
தவசேகர்
(6371)

## தவறிவிட்டது

திருக்குடும்ப கன்னியர்மடம் பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த SR. மேரி பிரான்சிஸ் யோசப் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல. 486873710x மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (6366)

## அருள்மிகு ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் தேவஸ்தானம்
வண். வடமேற்கு, ஆனைக்கோட்டை
## மகாசபைக் கூட்டம்

மேற்படி கூட்டம் 28.07.2002 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறும்.
கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதோடு புதிய நிர்வாகிகள் தெரிவு. ஆலயத்தோடு தொடர்பான ஏனைய பிரச்சினைகளும் அன்றைய கூட்டத்தில் ஆராயப்படும்.

அங்கத்துவ உரிமை கொண்ட அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

அ.குமாரவேல், தலைவர். சி.செகராசசிங்கம், செயலாளர். (6372)

## முல்லைத்தீவில் கண்டனப்பேரணி

கிளிநொச்சி,ஜூலை25

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோவை விடுதலை செய்யும்படியும் அவரைக் கைது செய்ததைக் கண்டித்தும் நாளை வெள்ளிக்கிழமை மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று முல்லைத்தீவில் இடம்பெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு காவல் பணிமனை முன் ஆரம்பமாகும் இந்தப் பேரணியில் ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானவர்கள் பங்கேற்கவிருக்கின்றனர்.

பேரணி முதலில் முல்லைத்தீவு அரச அதிபரிடம், இந்தியப் பிரதமருக்கு முகவரியிடப்பட்ட மகஜர் கையளிக்கப்படவிருக்கின்றது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் கொடும்பாவியும் எரிக்கப்படும். (ஐ-3)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரபுதேவா, கீர்த்திரெட்டி, வடிவேல், கடாலி. விவேக் நடித்த
மனதைத் திருடிவிட்டாய்
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே)
நாளைமுதல்
புன்னகைதேசம்
(6356)

# யாழ்.நூலகப் புனரமைப்பை பூர்த்திசெய்ய மேலும் நிதி
## புனர்வாழ்வு அமைச்சு ஒதுக்கியது

யாழ்ப்பாணம்,ஜூலை25

யாழ்நூலகக் கட்டடப் பணிகளை பூர்த்திசெய்ய அவசர உதவியாக 50 லட்சம் ரூபாவை புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு வழங்கியுள்ளது.

நூலகத்தைப் புனரமைக்கும் பணி போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமல் கடந்த சில மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டுவரப்பட்டது.

விசேட நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணை ஒன்றை அமைச்சரவையில் சமர்ப்பித்ததாகவும் -

அமைச்சரவை அந்தப் பிரேரணையை ஏற்றுக்கொண்டு நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் -

அமைச்சர் ஜயலத் தெரிவித்தார்.

உடனடியாகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அடுத்தமாதம் நூலகம் மக்கள் பாவனைக்குத் திறந்துவைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

யாழ்.நூலகத்துக்கு இன்ரநெற், ஈ - மெயில் வசதிகளை வழங்க தமிழக அரசு இணங்கியுள்ளது என்றும் -

தமிழக அரசுக்கும் நூலகத்துக்கும் இடையில் இணைப்புச்சேவை ஒன்றை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் - அவர் தெரிவித்தார். (ஐ-3)

### கசிப்பு உற்பத்தி செய்ததற்காக
# இரண்டு பேரிடம் தண்டப்பணமாக ஒரு லட்சத்து 4ஆயிரம் அறவீடு

யாழ்ப்பாணம்,ஜூலை25

கசிப்பு வைத்திருந்தமை மற்றும் கசிப்புத் தயாரிக்கும் உபகரணங்களை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் இருவருக்கு நேற்று யாழ். நீதிமன்றம் ஒரு லட்சத்து 4ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

யாழ். இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சகாயராஜா என்பவருக்கு 104 றாம் கசிப்பு, ஆயிரத்து 500 றாம் கோடா மற்றும் கசிப்புத் தயாரிக்கும் உபகரணங்கள் ஆகியவை வைத்திருந்த குற்றத்துக்காக 60 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 8ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பாக்கியம் என்பவருக்கு 8 றாம் கசிப்பு, 14 றாம் கோடா மற்றும் கசிப்புத் தயாரிக்கும் உபகரணங்கள் ஆகியவை வைத்திருந்த குற்றத்துக்காக 30 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 6ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ் நீதிமன்ற நீதிவான் இதவிக்னராஜா உத்தரவு பிறப்பித்தார். (எ-10)

# நாலந்தா சாரணர் குழு நாளை யாழ்.வருகிறது

கொழும்பு நாலந்தாக் கல்லூரி அதிபர் தலைமையில் அந்தக் கல்லூரியைச் சேர்ந்த சாரண ஆசிரியர்கள், சாரண மாணவர்களைக் கொண்ட குழுவினர் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை வெள்ளிக்கிழமை யாழ். வருகைதரவுள்ளனர்.

யாழ்.மத்திய கல்லூரியில் தங்கியிருக்கும் மேற்படி குழுவினர் யாழ். சாரணர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவர் என்றும் -

சனியன்று இரவு 'தீப்பாசறை' நிகழ்வு ஒன்றையும் யாழ்.சாரணர்களுடன் இணைந்து மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்துவர் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

மேற்படி குழுவினர் நயினாதீவு, கீரிமலை, கதிரினாபிச் ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்வர் எனக் கூறப்பட்டது. (எ-ரி)

ராஜா யாழ்ப்பாணம்.
31ஆம் திகதிவரை
அஜித், ஜோதிகா, வடிவேல் நடித்த
ராஜா
தினசரி 10.30, 2.30, 5.30
(C-22943)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
சூர்யா, லைலா, ராஜ்கிரண் நடித்த
நந்தா
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)
(C-22944)



## தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய
## 1008 சங்காபிஷேக நிகழ்வு ~ 2002

முருகன் அடியார்களே!

நிகழும் சித்திரபானு வருடம் ஆடி 10ஆம் நாள் (26.07.2002) வெள்ளிக்கிழமை
காலை 7.00 மணிக்கு
சங்கு பூசை நடைபெறும்.
காலை 8 மணிக்கு அபிஷேகம். அதைத் தொடர்ந்து எம்பெருமானுக்கு
சண்முக அர்ச்சனை நடைபெற்று பகல் 11 மணிக்கு எம்பெருமான்
வீதி உலா வருவார். *நண்பகல் அன்னதானமும் வழங்கப்படும்.*
*அன்று விசேட மேளக்கச்சேரி இடம்பெறும்.*

பிரதமகுரு சிவஸ்ரீ ச.கந்தசாமி ஐயர்,
உலக குருநாத ஐயர் (பிரதமகுரு)
*ஆலய உரிமையாளர், செல்வச்சந்நிதி, தொண்டமனாறு.*
(6363)

## கண்ணீர் அஞ்சலி

கண்ணன் அரிசி ஆலை உரிமையாளர்
சிவேஸ்வரன் (சிவா) அவர்களின் அன்புத் தாயார்

### அன்னலட்சுமி தம்பிராசா

அவர்களின் மறைவு குறித்துத் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

*ஓம் சாந்தி.*

இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர்
சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் இளைஞர்கள்.
(6369)

## மரண அறிவித்தல்

### முருகேசு இராசையா

நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட முருகேசு இராசையா அவர்கள் நேற்றுமுன்தினம் (23.07.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகாத்தை தம்பதியினரின் அன்பு மகனும் அன்னப்பிள்ளையின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, பாக்கியம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, பதஞ்சலி ஆகியோரின் மருமகனும் பாலசிங்கத்தின் (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) தந்தையும் மனோன்மணியின் அன்பு மாமனாரும் பகீரதன் (கதிரியலாளர் - யாழ். போதனா வைத்தியசாலை), ஜெயராசலிங்கம் பிரதீபா (வவுனியா), சுதர்சன், வசீகரன், கிரிதரன் ஆகியோரின் பேரனும் கியூசாவின் (வவுனியா) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2002) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
இ.பாலசிங்கம் (மகன்)
(6364)

# புதிய விலையில் பெற்றோல் நேற்றுமுதல் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூலை25

யாழ்.மாவட்டத்தில் பெற்றோல் விலைக்குறைப்பு நேற்றுமுதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ்.அலுவலகம் அறிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பு தலைமையக அதிகாரிகள் பெற்றோலின் விலையை ஒரு லீற்றருக்கு 58 ரூபா என நிர்ணயம்செய்து உடனடியாக அதை அமுல்படுத்துமாறு யாழ்.அலுவலக அதிகாரிகளுக்குப் பணித்திருந்தனர்.

அந்த அதிகாரிகள் இங்கிருந்து கொழும்பு திரும்பி மூன்று நாள்களின் பின்னரே புதிய விலை பற்றிய அறிவிப்பு யாழ்.அலுவலகத்தில் இருந்து நேற்று வெளியிடப்பட்டிருக்கிறது.

யாழ்நகரில் நேற்று எரிபொருள் முகவர்கள் பெற்றோலை புதிய விலைக்கு விற்பனை செய்தனர். பெரும் எண்ணிக்கையானவர்கள் தமது வாகனங்களுக்கு பெற்றோலைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டனர்.

பெரும்பாலான முகவர் நிலையங்களில் சில மணிநேரத்தில் பெற்றோல் கையிருப்பு தீர்ந்துபோய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-10-17-31-86)

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரவைக் கூட்டத்துக்கு ஜனாதிபதி குண்டுகளை எடுத்துச்சென்றார் என்ற வகையில் அமைச்சர் ஒருவர் கருத்துக்களை வெளியிட்டிருந்தார் என்று குறிப்பிட்ட அவர், பொய்க்குற்றம் சுமத்தி ஜனாதிபதிக்கு அபகீர்த்தி ஏற்படுத்திய அமைச்சர் அதற்காக மன்னிப்புக் கோரவேண்டும் என்றார்.

உடனே அமைச்சர்கள் ராஜித சேனாரத்ன, எஸ்.பி.திஸாநாயக்க போன்றோர் எழுந்து அப்படி எதுவும் அமைச்சரவைக் கூட்டத்தில் நடக்கவில்லை; இது உண்மைக்கு மாறானது; நீங்கள் வீண்புரளி கிளப்புகிறீர்கள் என்றனர். அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவும் இவ்வாறு மறுப்பு வெளியிட்டார்.

இதனையடுத்து எதிர்க்கட்சியைச் சேர்ந்த பொ.ஐ.முன்னணி உறுப்பினர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

சபையில் அமைதியை ஏற்படுத்த சபாநாயகர் பெரும் சிரமப்பட்டார். உறுப்பினர்களை ஆசனங்களில் அமரும்படி அவர் பல தடவைகள் கோரினார். உறுப்பினர்கள் ஆசனங்களில் அமர்ந்தால் எந்தவொரு விடயத்தையும் அமைதியாக ஆராயலாம் என்று சபாநாயகர் கூறிப்பார்த்தார்.

ஆனால், எதிர்க்கட்சியினர் செவிமடுக்கவில்லை. தொடர்ந்து கூச்சல், குழப்பத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இந்தக் கூச்சல், குழப்பத்துக்கு மத்தியில் நிதியமைச்சர் கே.என். சொக்ஸி பெறுமதி சேர் வரி (வற்) சட்டமூலத்தை விவாதத்துக்காக சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

பெரும் குழப்பத்துக்கு மத்தியில் அவரது உரை தொடர்ந்தது. சம்பந்தப்பட்ட சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டதால் அதன்மீது உரையாற்ற வரும்படி எதிர்க்கட்சியினரை பெயர் குறிப்பிட்டு சபாநாயகர் அழைத்தார். ஆனால், அவர்கள் எவரும் பேச வரவில்லை. மாறாக, அவர்களில் சிலர் சபையின் மத்திய பகுதிக்கு வந்தனர். சபாநாயகர் ஆசனத்தை நோக்கி முன்னேறினர். அவர்கள் செங்கோலை எடுத்துச்செல்லவும் முயன்றனர்.

சபை அதிகாரிகளும், அரச தரப்பு எம்.பிக்கள் சிலரும் விரைந்துவந்து அதனைத் தடுத்தனர். அப்போது சபையின் மத்திய பகுதியில் பெரும் இழுபறி ஏற்பட்டது. தொடர்ந்து பெரும் கூச்சல், குழப்பத்துக்கு மத்தியில் கைகலப்பு ஏற்பட்டது. அரச - எதிரணி எம்.பிக்கள் மோதிக்கொண்டனர்.

உடனே இரு தரப்புகளையும் சேர்ந்த பல உறுப்பினர்கள் விரைந்துவந்து கைகலப்பைத் தடுப்பதில் ஈடுபட்டனர்.

முற்பகல் 10.40 மணிவரை இந்த அமளிதுமளிகள் நீடித்தன.

சபையைக் கட்டுப்படுத்தமுடியாதுபோகவே சபாநாயகர் சபையை ஒத்திவைத்தார்.

பின்னர் அவர் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டினார்.

(ஐ)

## அமெரிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனரல் பிரன்ட் ஸ்கோகொப்டைச் சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்றினை நடத்தினார்.

சமாதான முயற்சிகளின் முன்னெடுப்பின்போது இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படவேண்டிய மீளமைப்பு நடவடிக்கைகள் பற்றி இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

(ஐ)


## ஆசிய இளையோர் தினம் 2003 - திருச்சிலுவை தரிசிப்பு

## யாழ். மறைமாவட்டத்தில்...

2003 ஆவணி பெங்களூரில் நடைபெறவுள்ள ஆசிய இளையோர் தின விழாவிற்கு முன் ஆயத்த நிகழ்வாக ஒரு திருச்சிலுவை ஆசிய நாடுகளூடாகப் பயணஞ்செய்கிறது. இம்மாதம் 14ஆம் திகதி இத்திருச்சிலுவை இலங்கைக்கு வந்து எல்லா மறைமாவட்டங்களையும் தரிசிக்கின்றது. யாழ். மறைமாவட்டத்தில் 26ஆம், 27ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளில் தரிசிப்புகள் இடம்பெறும்.

இளையோரின் இருப்பில், பார்வைகளில், சிந்தனைப் போக்குகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது இத்தரிப்பின் முதன்மை நோக்கங்களுள் ஒன்றாக அமையும்.

நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 26 - வெள்ளி | பி.ப. 4.30 மணி | - முகமாலையில் திருச்சிலுவை வரவேற்று யாழ். நோக்கி எடுத்துவரப்படும். |
| | பி.ப. 6.00 மணி | - குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருச்சிலுவை தரித்து நிற்கும். |
| 27 - சனி | மு.ப. 8.30 மணி | - இளையோர் அனைவரும் புனித யாகப்பர் ஆலயத்தில் ஒன்றுகூடுவர். |
| | மு.ப. 9.00 மணி | - யாழ் மரியன்னை பேராலயத்தை நோக்கி திருச்சிலுவைப் பேரணி புறப்படும். |
| | பி.ப. 5.00மணி | - வன்னி மறைக்கோட்டத்தில் திருச்சிலுவை ஒப்படைக்கப்படும். |
| 28, 29 - | ஞாயிறு, திங்கள் | - வன்னி மறைக்கோட்டத்தில் தரிசிப்புகள் இடம்பெறும். |

"இளையோரே அனைவரும் திரண்டு வருவீர், பங்குபற்றுவீர், பயன்பெறுவீர்"

*இணைப்பாளர்கள்:*

அருட்பணியாளர் ஜோ.றெனோல்ட்,

அருட்பணியாளர் சி.அ.அருட்செல்வன்.

(6368) யாழ். மறைக்கோட்ட இளையோர் ஒன்றியம்.


## அப்துல் கலாம் இன்று பதவியேற்பு

புதுடில்லி,ஜூலை25

இந்தியாவின் 12 ஆவது ஜனாதிபதியாக பிரபல விஞ்ஞானி 'பாரத ரெத்னா' டாக்டர் அப்துல் கலாம் இன்று பதவியேற்கிறார்.

இன்று காலை 10.30 மணிக்கு இந்திய நாடாளுமன்ற மைய மண்டபத்தில் பதவியேற்பு நிகழ்வு நடைபெறும். டாக்டர் கலாமுக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆனந்த் பதவிப்பிரமாணம் செய்துவைக்கின்றார்.

(ஐ)

## யாழ்.பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யார் அங்கு சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்பதை அவர் அறிந்துகொண்டார்.

ஏமாற்றத்துடன் ஆஸ்பத்திரிக்கு வெளியே வந்தவேளை ஆஸ்பத்திரி வீதியில் - யாழ். வர்த்தக வங்கிக்குச் சமீபமாக - 'ஹைஏஸ்' வானுடன் நின்றிருந்த அதேநபர் அவரை அங்கு அழைத்ததாகவும் -

பிரஸ்தாப மாணவன் வானை நெருங்கிச் சென்றவேளை வானுக்குள் இருந்தோர் அவரைப் பலாத்காரமாக உள்ளே இழுத்து ஏற்றிச் சென்றதாகவும் -

கூறப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சன நடமாட்டம் குறைவாகக் காணப்பட்ட வேளை - காலை சுமார் 7 மணியளவில் - இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

வானுக்குள் இருந்தோர் தனது கண்களையும் வாயையும் கட்டிவைத்து சிகரெட்டால் உடல் முழுவதும் சுட்டு சித்திரவதை புரிந்தனர் என்றும் -

சுமார் நான்கு ஐந்து பேர் சிகரெட்டுகளால் தன்னைச் சுட்டபோது அந்த வேதனையை மட்டும் அனுபவிக்க முடிந்ததாகவும் - மற்றப்படி என்ன நடக்கிறது என்பதை உணரமுடியாதவாறு மயக்கநிலையில் இருந்ததாகவும் -

கடத்தப்பட்ட மாணவன் உதயனுக்குத் தெரிவித்தார்.

சுமார் மூன்று மணிநேரத்தின் பின் -

மயக்கம் முற்றாகத் தெளியாத நிலையில் -

முகமாலைப் பகுதியில் தன்னை அவர்கள் இறக்கிவிட்டதாகவும் -

அங்கிருந்து வாகனம் ஒன்றில் ஏறி மாங்குளம் சென்று பின்னர் மறுநாள் தனது வீட்டுக்குச் சென்று சேர்ந்ததாகவும் - அவர் கூறினார்.

பிரஸ்தாப மாணவனின் உடல் முழுவதும் சிகரெட்டால் சுட்ட காயங்கள் காணப்படுகின்றன.

வாகனத்தில் தன்னைக் கடத்தியோர் தன்னோடு எதுவும் பேசவில்லை என்றும் - சிகரெட் புகை மணத்தையும் மது வாடையையும் மட்டுமே தன்னால் உணர முடிந்ததாகவும் - மாணவன் தெரிவித்தார்.

திங்களன்று ஆரம்பமான இறுதியாண்டுப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த வேளையில் இந்த மாணவன் கடத்தப்பட்டிருக்கிறார்.

இச்சம்பவம் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

(ஐ)


A/L 2003

கணக்கீடு

திரு.பாலவாசன்

B.B.A. (F.m.Spl.)

அலகு ரீதியான மீட்டல் வகுப்பு

Mon., Wed., Fri.→ 6.15-7.15 a.m.

ஆரம்பம் :29.07.2002→ Mon. 6.15 (ப.ப.)

விக்னா

கல்வி நிறுவனம் (6335)

எமது புதிய

வீடியோ CD வெளியீடுகள்

சூரியா நடித்த

ஸ்ரீ

லிவிங்ஸ்டன், தேவயானி

நடித்த

குருவம்மா

வீடியோ விமல்

(C/23048) யாழ்ப்பாணம்.


## படையினரின் அத்துமீறல்கள்:

# தென்மராட்சியில் நாளை மாணவர் கண்டனப் பேரணி

யாழ்ப்பாணம்,ஜூலை25

கல்விக்கான அடிப்படை உரிமைகளை மறுக்கும் வகையில் படையினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைக் கண்டித்து நாளை வெள்ளிக்கிழமை தென்மராட்சியில் கண்டனப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கோட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் இந்தப் பேரணியை ஒழுங்குசெய்துள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை படையினர் மீறுவதையும் தென்மராட்சி மாணவர் பலரின் கல்விக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுவருவதையும் கண்டித்து ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இந்தப் பேரணியில், தென்மராட்சிப் பகுதியில் வசிக்கும் தரம் 10 இற்கு மேற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குகொள்வர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாளை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்றிலில் இருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணி, தென்மராட்சி பிரதேச செயலகத்தைச் சென்றடைந்ததும் அங்கு மகஜர் கையளிக்கப்படும்.

படையினரின் மீறல்கள் குறித்து பலருக்கும் பல தடவைகள் அறிவிக்கப்பட்டும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் -

இதனைக் கண்டித்தே தாம் பேரணி நடத்தவுள்ளதாகவும் -

மாணவர் ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## களுத்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தனர்.

அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் நாடு திரும்பியதும் நிரந்தரமான தீர்வு ஒன்றை அறிவிப்பதாகவும் -

அதுவரை போராட்டத்தை நிறுத்தும்படியும் -

சந்திரசேகரன் கேட்டுக்கொண்டார்.

இதை ஏற்றுக்கொண்ட கைதிகள், நேற்று மாலைமுதல் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

இதேவேளை -

மட்டக்களப்புச் சிறையில் தொடரும் கைதிகள் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக அமைச்சர் சந்திரசேகரனும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கமும் இன்று அங்கு செல்கின்றனர்.

இதற்கிடையில் -

கைதிகளை விடுலை செய்வது தொடர்பாக ஆராய்வதற்காக பாதுகாப்பு அமைச்சில் இன்று மாலை 4 மணிக்கு உயர்மட்ட மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன், அமைச்சர் பெ.சந்திரசேகரன், தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொள்வர்.

(ஐ-3-9)

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களினால் இனப் பாரபட்சம் பற்றிய அவர்களது கருத்து எடுபடாமற்போயிற்று.

☆ ராஜீவ் மற்றும் பிரேமதாஸாவை புலிகளே கொன்றார்கள்.

என்பன போன்ற கருத்துக்களைப் பிரதமர் அல்ல, பேட்டிக் கட்டுரையை வரைந்த செய்தியாளரே தெரிவித்திருந்தார் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

(ஆ-ர்)


## ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 23 | 25 |
| 07 | 07 |
| 1954 | 2001 |

## அமரர் மகாலிங்கம் சத்தியசீலன்

கனடாவில் (SCARBROUGH) உள்ள அவரது இல்லத்தில் ஆவணி மாதம் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

திதி: ஷஷ்டி

ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு அரவணைக்க அன்பான உள்ளங்களுண்டு
ஆனாலும் அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே ஐயா!
எங்கள் இதயங்களில் என்றும் அணையாமல் வீற்றிருக்கும்
அணையாத அன்புத் தீபமே! எங்கள் அனைவரையும்
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றாலும் மாறாது தங்கள் மேல் கொண்ட பாசம்
தங்கள் பிரிவால் வாடும் எங்கள் மனம் தங்களுடன் வாழ்ந்த நினைவுகளை
என்றென்றும் மறக்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய

இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உங்களின் மாறாத நினைவில் மனம் வாடும்:*

தகவல்: இ.லோகநாதன் (இ.மி.ச.) (6341)

*மனைவி* - ச.அருந்ததி.
*பிள்ளைகள்* - டனேசா, யெனித்தா, சஞ்சயன்.
*மாமி* - பூரணம்.

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு நாகரத்தினம்

(உரிமையாளர், நாகரத்தினம் அன்கோ, ஸ்ரான்லி வீதி)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது கொழும்பில் வசித்தவருமான மார்க்கண்டு நாகரத்தினம் அவர்கள் நேற்று (24.07.2002) புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*No. 192, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.* (6373)

தகவல்: குடும்பத்தினர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.